# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

கொள்கை விளக்கக் குறிப்பு
2022 – 2023

## மானியக் கோரிக்கை எண். 7

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | மீன்வளக் கொள்கை | 5 |
| 3 | நிருவாக அமைப்பு | 10 |
| 4 | தமிழ்நாட்டின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம் | 15 |
| 5 | துறையின் முக்கிய செயல்பாடுகள் | 22 |
| 6 | தொழில் புரிவதற்கான வழிமுறைகளை எளிதாக்குவதன் மூலம் மீன்வளப்பிரிவில் தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவித்தல் | 128 |
| 7 | நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் | 132 |
| 8 | தமிழ்நாடு மீனவர் நல வாரியம் | 134 |
| 9 | தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் | 141 |
| 10 | தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் | 148 |
| 11 | தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் | 157 |
| 12 | இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள் | 171 |
| 13 | நிதி ஒதுக்கீடு (2022–2023) | 175 |
| 14 | நிறைவுரை | 175 |

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கொள்கை விளக்கக்குறிப்பு
# 2022-23

## 1. முன்னுரை

மீன் ஒரு ஊட்டச்சத்து நிறைந்த புரத உணவு ஆகும். இது வளர்ந்து வரும் மக்கள்தொகையின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழகத்தின் மீன்வள ஆதாரங்களாக உள்ள கடல்கள், கழிமுகங்கள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் குளங்கள் போன்றவை, மாநிலத்தின் ஒட்டுமொத்த மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான மகத்தான வாய்ப்பை வழங்குகின்றன. மீன்வளப்பிரிவானது கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன், மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. மீன் அதன் ஊட்டச்சத்து மற்றும் சுவைக்காக பொது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழக அரசு, மீனவர்களின் நலனுக்காகவும், மீன்வளப்பிரிவின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும்

மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இப்பிரிவின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, மீன்வளத்தை பாதுகாத்தல், நிலையான மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு புதுமையான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன் பிடிக்கும் இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை அரசு உருவாக்கியுள்ளது.

மீன்பிடிப்பு தடைக்காலம் மற்றும் மீன்பிடிப்பு குறைவு காலங்களில் கடல் மீனவர்களின் சிரமங்களை போக்கவும், அவர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட, தடையற்ற தகவல் தொடர்பு அமைப்பை இத்துறை நிறுவியுள்ளதுடன், செயற்கைக்கோள் தொலைபேசிகள், உயர்

அதிர்வெண் தொலைத்தொடர்பு கருவிகள் (VHF sets), டிரான்ஸ்பாண்டர்கள் போன்ற நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கச்சத்தீவை மீட்டெடுப்பது மற்றும் அதன் மூலம் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் வளைகுடாவில் மீன்பிடிக்கும் உரிமையை காப்பதென்பது, அரசின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்கள் மற்றும் அவர்களது உடைமைகள் மீது இலங்கை அரசு தாக்குதல் நடத்தும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண, தமிழக அரசு ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் மீன்வளர்ப்பு போன்ற மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழலுக்குகந்த மற்றும் நீடித்த முறையிலான ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேம்படுத்திடும் வகையில் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துகிறது.

மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட, அனைத்து நீர்நிலைகளிலும், தரமான மீன் குஞ்சுகள் இருப்பு செய்து, மீன்வளர்ப்பு

மேற்கொள்ளும் வகையில், உள்நாட்டு மீன் குஞ்சு உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் இடையே உள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்திட தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மீன்வளப்பிரிவின் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மீன்வளர்ப்போரை சென்றடையச் செய்திட, நீர் மறுசுழற்சிமுறை மீன்வளர்ப்பு (RAS) மற்றும் உயிர்க்கூழ்ம (Bio–floc) முறை மீன் வளர்ப்பு போன்ற திட்டங்கள் மானியம் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றன.

தமிழகத்திலிருந்து கடல் உணவுப் பொருள் ஏற்றுமதியை இரட்டிப்பாக்கிட, உவர் நீர் மீன் வளர்ப்பை பெருமளவில் விரிவுபடுத்திடவும், அதே நேரத்தில் கடலோர பகுதிகளில் உள்ள விவசாயத்திற்கு பயன்படாத நிலங்களை கண்டறிந்து, இதற்காக பயன்படுத்தவும் அரசு தெளிவான தொலைநோக்குத் திட்டங்களைக் கொண்டுள்ளது. மேலும், மீன் பதனிடுதல் மற்றும் ஏற்றுமதிக்கு தேவையான தொடர் குளிர்காப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து நன்கு திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

2019–20 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 14.16 மில்லியன் மெட்ரிக் டன் ஆகும். நாட்டின் மொத்த கடல் மீன் உற்பத்தியில் தமிழகம் 2–வது இடத்தில் உள்ளது. 2019–20 ஆம் ஆண்டில் தமிழகத்தின் மொத்த மீன் உற்பத்தி 7.57 லட்சம் மெட்ரிக் டன் ஆகும். கடல் உணவு ஏற்றுமதியில் உலகளவில் இந்தியா முன்னணியில் உள்ள நிலையில், தமிழகம் நாட்டின் மொத்த கடல் உணவு ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகிறது. 2020–21 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த கடல் உணவு ஏற்றுமதி ரூ.43,717.26 கோடி மதிப்பிலான, 11.49 இலட்சம் மெட்ரிக் டன் என்றுள்ள நிலையில், தமிழ்நாடு 1.10 லட்சம் மெட்ரிக் டன் கடல் பொருட்கள் ஏற்றுமதி மூலம் ரூ.5,565.46 கோடி அந்நிய செலாவணி ஈட்டியுள்ளது.

## 2. மீன்வளக் கொள்கை

மீனவர் நலன், மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரின் வருவாயினை உயர்த்துதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு மீன்வளக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

## 2.1 தொலைநோக்குப் பார்வை

*"மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மூலம் மீன் உற்பத்தியினை பெருக்குதல் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை, பாதுகாப்பினை உறுதி செய்தல்".*

## 2.2 செயலாக்கம்

மாநிலத்தின் அனைத்து நீர்வளங்களை மேம்படுத்தி, மேலாண்மை செய்து, பாதுகாத்து, வளங்குன்றாமல் பயன்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஊட்டச்சத்துமிக்க உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## 2.3 முக்கிய கொள்கைகள்

மீன்வளம் சார்ந்த அரசின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர்களின் நலன் பேணுதல்.

2. பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

3. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்வள ஆதாரங்களின் மூலம் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்.

4. மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.

5. அரசுமீன் பண்ணைகள், மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், தொடர்குளிர்காப்பு, மதிப்புகூட்டுதல் மற்றும் மீன்பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிகரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

6. மீன்வளர்ப்பின் மூலம் ஊரகப்பகுதியில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

7. மீனவ மகளிர் குறிப்பாக மீனவ கைம்பெண்களுக்கு புதிய வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துதல் மூலம் மீனவ மகளிருக்கு அதிகார பகிர்வளித்தல்.

8. மீன்குஞ்சு தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.

9. விலைமதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப்பொருட்களின் ஏற்றுமதியினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

10. உரிய சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன் வாயிலாக மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மீன்வளங்களை அதிகரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.

11. மீனவர்கள் மற்றும் மீன்துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின் மூலம் மீன்வளத்தை மேம்படுத்துதல்.


12. தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித்திறனை மறு மதிப்பீடு செய்தல்.

13. மின் ஆளுமை மூலம் வெளிப்படைத் தன்மையுடன் திட்டங்கள் சென்றடைவதை கண்காணித்து உறுதி செய்தல்.

## 3. நிருவாக அமைப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

# நிருவாக அமைப்பு


மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர் (3)
காவல் கண்காணிப்பாளர் (1)
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் (1)
தலைமை பொறியாளர் (1)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (5) / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (13) / துணை இயக்குநர் (பொறியியல்) (1) / துணை இயக்குநர் (பணியாளர்) (1 )
துணை காவல் கண்காணிப்பாளர் (1)
கணக்கு அலுவலர் (1)
செயற்பொறியாளர் (5)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் (57) / நேர்முக உதவியாளர் (12) / துணைப் பதிவாளர் (1)
உதவி செயற்பொறியாளர் (13)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வாளர் (167) / கூட்டுறவு சார்–பதிவாளர் (16)
காவல் ஆய்வாளர் (10) / காவல் சார்–ஆய்வாளர் (8)
உதவி பொறியாளர் (13) / இளநிலை பொறியாளர் (17)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்ஆய்வாளர் (84) / கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர் (27) / கடல்முதல்வர் (13)

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,797 ஆகும். பதவிவாரியாக பணியிடங்களின் விவரம் அட்டவணை–1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1**

## பதவிவாரியாக அலுவலர்கள் விவரம்

| வ எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது+ அயற்பணி) |
|---|---|---|
| 1 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் | 1 |
| 2 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர் | 2+1 |
| 3 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் | 4+1 |
| 4 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் | 11+2 |
| 5 | துணை இயக்குநர் (பணியாளர்) | 1 |
| 6 | துணை இயக்குநர் (பொறியியல்) | 1 |
| 7 | நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர் | 1 |
| 8 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்/ மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் (இயந்திரவியல்) | 49+8 |
| 9 | நேர்முக உதவியாளர் | 12 |

| வ எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது+ அயற்பணி) |
|---|---|---|
| 10 | துணை பதிவாளர் | 1 |
| 11 | கணக்கு அலுவலர் | 1 |
| 12 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வாளர் | 167 |
| 13 | கூட்டுறவு சார் பதிவாளர் | 16 |
| 14 | கடல் முதல்வர் | 13 |
| 15 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்–ஆய்வாளர் | 84 |
| 16 | கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர் | 27 |
| 17 | மீன்வள உதவியாளர் | 168 |
| 18 | அமைச்சுப் பணி மற்றும் களப்பணியாளர்கள் | 1,028 |
| | **மொத்தம்** | **1,587** |
| | **பொறியியல் பிரிவு** | |
| 1 | தலைமைப் பொறியாளர் | 1 |
| 2 | செயற்பொறியாளர் | 5 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 13 |
| 4 | உதவி பொறியாளர் | 13 |
| 5 | இளநிலை பொறியாளர் | 17 |
| 6 | முதுநிலை வரைவு அலுவலர் | 1 |
| 7 | வரைவு அலுவலர் | 8 |
| 8 | இளநிலை வரைவு அலுவலர் | 4 |
| 9 | கோட்ட கணக்கு அலுவலர் | 4 |
| 10 | தொழில்நுட்ப உதவியாளர் | 23 |
| 11 | அமைச்சுப்பணி மற்றும் இதர பணியாளர்கள் | 9 |

| வ எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது+ அயற்பணி) |
|---|---|---|
| | **மொத்தம்** | **98** |
| **கடல்வள சட்ட அமலாக்கப் பிரிவு** | | |
| 1. | காவல்துறை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | துணை காவல் கண்காணிப்பாளர் | 1 |
| 3. | காவல் ஆய்வாளர் | 10 |
| 4. | காவல் சார்–ஆய்வாளர் | 8 |
| 5. | தலைமைக் காவலர்/காவலர் | 53 |
| 6. | காவல் ஊர்தி ஓட்டுநர் | 19 |
| 7. | கண்காணிப்பாளர் | 1 |
| 8 | உதவியாளர் | 2 |
| 9. | முகாம் உதவியாளர் | 17 |
| | **மொத்தம்** | **112** |
| | **மொத்தக் கூடுதல்** | **1,797+12** |

## 4. தமிழ்நாட்டின் மீன்வளம்– ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையினையும், 41,412 சதுர கி.மீ. கண்டத்திட்டையும், 1.9 இலட்சம் சதுர கி.மீ. பிரத்யேக பொருளாதார மண்டலத்தையும் (EEZ) தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தி 5.48 இலட்சம் மெட்ரிக் டன் (2020–21) ஆகும். இம்மீன் உற்பத்தி 10.48 இலட்சம் கடல் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக உள்ளது. இதில் 1.10 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.5,565.46 கோடி அந்நிய செலாவணி ஈட்டப்பட்டுள்ளது. 5,924 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 43,982 நாட்டுப்படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசனக் குளங்கள், குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் பிற நீர்நிலைகள் உள்ளடக்கிய 3.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகள் உள்ளன. சுமார் 56,000 ஹெக்டேர் உவர் நீர்பரப்பில் உப்பங்கழிகள், கழிமுகங்கள் மற்றும் முகத்துவாரங்கள் போன்ற மீன்பிடிப்பிற்கு உகந்த மீன்வள ஆதாரங்களாக உள்ளன. தற்பொழுது,

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வரும் 3,387.33 ஹெக்டேர் பரப்பளவில் 1,932 பண்ணைகளில் குறிப்பாக, இறால் வளர்ப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. உள்நாட்டு மீன்வளம் 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது.

## 4.1 கடல் மீன்வளம்

தமிழ்நாடு 14 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ நீளமுள்ள, இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. கடல் மீன்வளம் குறித்த கண்ணோட்டம் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2**

**கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள்-2021-22**

| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி.மீ. |
| பிரத்யேக பொருளாதார மண்டலம் (EEZ) | 1.9 இலட்சம் ச.கி.மீ. |
| கண்டத்திட்டு(Continental shelf) | 41,412 ச.கி.மீ. |
| கடலோர மாவட்டங்கள் | 14 |
| மீனவ கிராமங்கள் | 608 |
| கடலோர மீனவ மக்கட்தொகை | 10.48 இலட்சம் |

| | |
|---|---|
| **பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணைய வழி)** | |
| மீன்பிடி விசைப்படகுகள் | 5,924 |
| நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை) | 43,982 (40,181 + 3,801) |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | |
| பெரிய மீன்பிடி துறைமுகங்கள் | **9** (சென்னை, பூம்புகார், நாகப்பட்டினம், மூக்கையூர், தூத்துக்குடி, சின்னமுட்டம், முட்டம் (PPP), குளச்சல் மற்றும் தேங்காப்பட்டினம்) |
| நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் | **3** (பழையாறு, மல்லிப்பட்டினம் மற்றும் கடலூர்) |
| கட்டுமானத்தில் உள்ள மீன்பிடி துறைமுகங்கள் | **6** (திருவொற்றியூர்குப்பம், அழகன்குப்பம்– ஆலம்பறைகுப்பம், வெள்ளப்பள்ளம், தரங்கம்பாடி, ஆற்காட்டுத்துறை மற்றும் நம்பியார் நகர்) |

| | |
|---|---|
| மீன் இறங்கு தளங்கள்/ படகு அணையும் தளங்கள் | 52 |
| மீன் இறங்கு மையங்கள் | 251 |
| கடல்மீன் உற்பத்தி (2020–21) | 5.48 இலட்சம் மெட்ரிக் டன் |
| கடல்பொருள் ஏற்றுமதி (2020–21) * | அளவு: 1,10,023 மெட்ரிக் டன் மதிப்பு: ரூ.5,565.46 கோடி |

**ஆதாரம்:**

* கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)

## 4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் அளவிலான உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் உள்ளன. இதில் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன ஏரிகள் மற்றும் குளங்கள் மீன்பிடிப்பிற்கும் மற்றும் மீன்வளர்ப்பிற்கும் உகந்ததாக உள்ளன.

உள்நாட்டு மீன்வளப்பிரிவின் கண்ணோட்டம் அட்டவணை எண் 3ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை: 3

## உள்நாட்டு மீன்வள புள்ளி விவரங்கள் 2021-2022

| | |
|---|---|
| உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் | 3,85,761 ஹெக்டேர் |
| நீர்த்தேக்கங்கள் | 62,015 ஹெக்டேர் |
| பெரிய, சிறிய பாசன குளங்கள் மற்றும் குட்டைகள் | 2,67,746 ஹெக்டேர் |
| உவர்நீர் பரப்பளவு | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கட்தொகை | 2.36 இலட்சம் |
| **உள்நாட்டு மீன்வள கட்டமைப்புகள்** | |
| **மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்** | |
| அரசு மீன்பண்ணைகள் | 11 |
| தனியார் மீன்பண்ணைகள் | 46 |
| **மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்** | |
| அரசு மீன்பண்ணைகள் | 39 |
| தனியார் மீன்பண்ணைகள் | 271 |
| தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | 5 |
| கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு (அரசு) | 3 |
| 2020-21 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி | 1.75 இலட்சம் மெட்ரிக் டன் |

தமிழ்நாடு அரசு உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட முனைப்புடன் செயல்பட்டு உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரித்திட தரமான மீன்குஞ்சுகளை நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்து வருகிறது. மேலும், நீர்வள ஆதாரத்துறைக்கு சொந்தமான, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், மதுரை மற்றும் தேனி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு குளங்களை மீன்பாசி குத்தகைக்கு விடுதல், மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மூலம் பாசன குளங்களில் மீன்வளர்ப்பு மேற்கொள்ள ஊக்குவித்தல் மற்றும் குளங்களின் உரிமையாளர்களாகிய சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் மீன்வளர்ப்பிற்கு உகந்த குளங்களை மீன்பாசி குத்தகைக்கு விட்டு மீன்வளர்ப்பினை மேற்கொள்ளும் சீரிய நடவடிக்கையினை எடுத்து வருகிறது. மேலும், அரசு சிறப்பு முயற்சியாக பல்வேறு திட்டங்களின் மூலம் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து வருகிறது.

## 4.3 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் உவர்நீர் மீன்வளம்

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பம் மீன் உற்பத்தியை அதிகரிப்பதிலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகிக்கிறது. உவர் நீர் மீன் வளர்ப்பினை மேற்கொள்ளக்கூடிய பரந்து விரிந்த முகத்துவாரங்கள், உப்பங்கழிகள் மற்றும் உப்பினால் பாதிக்கப்பட்ட நில பகுதிகள் கொண்ட நீண்ட கடற்கரையை தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது.

தற்போது, மாநில கடலோர பகுதிகளில் இறால் வளர்ப்பு அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது. உவர் நீர் பகுதிகளில் இறால்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கையாக கழிநண்டு, பால் கெண்டை, மடவை மற்றும் கொடுவா மீன் போன்ற மாற்று மீன் இனங்களை வளர்க்கும் திட்டங்களை செயல்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## 5. துறையின் முக்கிய செயல்பாடுகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

i. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.

ii. கடல் மீன்பிடிப்பின் போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

iii. இயற்கை பேரிடர் காலங்களில் தேடுதல், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.

iv. மீனவர்களுக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.

v. மீன்வளச் சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துதல்.

vi. கடல் மற்றும் உள்நாட்டு மீன் குஞ்சுகளை உற்பத்தி மற்றும் இருப்பு செய்வதன் மூலம் மீன்வள ஆதாரங்களை பாதுகாத்து மேலாண்மை செய்தல்.

vii. உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மூலம் மேம்படுத்துதல்.

viii. மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் அரசு மீன் பண்ணைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

ix. சுகாதாரமான முறையில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் குளிர்காப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

x. மீனவ மகளிருக்கென சிறப்பு மாற்று வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்துதல்.

xi. மீனவர் மற்றும் மீன்வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்.

xii. விரிவாக்கப்பணிகள் மூலம் திட்டங்கள் சென்றடையச் செய்தல்.

xiii. மீனவ கூட்டுறவு சங்கங்களை மேலாண்மை செய்தல்.

xiv. மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் மீனவர்களின் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

xv. மீன் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.

xvi. மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்குதல் போன்ற நலத்திட்டங்களை செயல்படுத்துதல்.

xvii. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் நிவாரணம் மற்றும் உதவி வழங்குதல்.

## 5.1 கடல் மீன்வளத் திட்டங்கள்

தமிழக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. நலத்திட்டங்களின் பயன்கள் குறுகிய காலத்திற்குள் வெளிப்படைத்தன்மையுடன் பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்திடவும், அரசு நலத்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் நிதியுதவிகளை, பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக சென்றடைவதை உறுதி செய்கிறது.

2021–22ஆம் ஆண்டிற்கு பல்வேறு மீனவர் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்திட மொத்தம் ரூ.320.03 கோடி தமிழக அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

பல்வேறு நலத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :

## I. மாநிலத்திட்டங்கள்

### 5.1.1 மீன்பிடி தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண தொகை வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடி தடைக்காலம் கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் (இராஜாக்கமங்கலம்துறை முதல் நீரோடி வரை) ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும் 61 நாட்களுக்கு அமல்படுத்தப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,71,234 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையாக ரூ.85.62 கோடி பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2022–2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.2 கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடிப்பு குறைவு காலத்தில் சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல்

கடல் மீனவர் குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக மீன்பிடி குறைவு காலத்தில், மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி குறைவு கால சிறப்பு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2021–22ஆம் ஆண்டு முதல் மீன்பிடி குறைவுக் காலங்களில் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு நிவாரணத் தொகை ரூ.5,000–லிருந்து ரூ.6,000 ஆக உயர்த்தி வழங்கிட அரசால் அக்டோபர் 2021–ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2021–22ம் ஆண்டிற்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.108 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2021–22ஆம் ஆண்டில் முதற்கட்டமாக திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,51,484 மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ.90.89 கோடி பயனாளிகளின் வங்கிக்

கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ பயனாளிகளுக்கு வரும் மே 2022 திங்களில் சிறப்பு நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யப்படும்.

இத்திட்டம் 2022-2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.3 கடல் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மீனவரும், 9 மாதங்களில் ரூ.1,500 செலுத்துவர். இத்தொகையுடன் மாநில அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.3,000 சேர்க்கப்பட்டு, மொத்தம் ரூ.4,500 ஒரு பயனாளிக்கு வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டிற்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.63.19 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டதை தொடர்ந்து, முதற்கட்டமாக திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,75,072 மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக மொத்தம் ரூ.52.52 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்கில்

வரவு வைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வரும் மே 2022 திங்களில் சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யப்படும்.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.4 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மீனவ மகளிரும், 9 மாதங்களில் ரூ.1,500 செலுத்துவர். இத்தொகையுடன் மாநில அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.3,000 சேர்க்கப்பட்டு, ஆக மொத்தம் ரூ.4,500 மீன்பிடிப்பு குறைவு காலங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

2021-22ஆம் ஆண்டிற்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை வழங்கிடும் பொருட்டு மொத்தம் ரூ.62.80 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, முதற்கட்டமாக திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,73,671 மீனவ மகளிர் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக

மொத்தம் ரூ.52.10 கோடி, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு வரும் மே 2022 திங்களில் சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகை பட்டுவாடா செய்யப்படும்.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.5. மீனவர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

தமிழ்நாடு அரசு, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விசைப்படகிற்கும் வருடத்திற்கு (மீன் பிடிப்பு உள்ள 10 மாதங்களுக்கு மாதம் ஒன்றிற்கு 1,800 லிட்டர் வீதம் 2 மாதம் மீன்பிடி தடைகாலம் நீங்கலாக) அதிகபட்சமாக 18,000 லிட்டரும், ஒவ்வொரு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுபடகிற்கு, வருடத்திற்கு அதிகபட்சமாக 4,000 லிட்டரும் வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்கி வருகிறது.

2021-22-ஆம் நிதியாண்டில், (2022 பிப்ரவரி திங்கள் முடிய) 93,858.41 கிலோ லிட்டர் டீசல் எரியெண்ணெய்க்கு ரூ.166.36 கோடி மானியமாக

வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022–23–ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.6 பாரம்பரிய மீன்பிடிகலன்களுக்கு தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிகலன்களுக்கு லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 வீதம் ஒரு படகிற்கு ஆண்டு ஒன்றுக்கு 3,400 லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

2021–22ஆம் நிதியாண்டில், (2022 பிப்ரவரி திங்கள் முடிய) 14,544.37 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய்க்கு ரூ.39.34 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022–23 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.7 கடலில் மீன்பிடிக்கும் போது பிறநாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித்தொகை வழங்குதல்

கடலில் மீன் பிடிக்கும் போது பிறநாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்தினரின்

வாழ்வாதாரத்தினை பாதுகாத்திடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.250 வீதம் தின உதவித்தொகையாக அரசு வழங்கி வருகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021–22 ஆம் ஆண்டில், சிறைபிடிக்கப்பட்ட 101 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.12.37 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது. 2022–23 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.8 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித்தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு தின உதவித்தொகையாக ரூ.250 வீதம் (மாதமொன்றுக்கு ரூ.7,500) மாநில அரசால் வழங்கப்படுகிறது. கடலில் மீன்பிடிப்பிற்காக சென்று காணாமல் போயிருக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகையினை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது குழுவிபத்து காப்புறுதி திட்டம்/ தமிழ்நாடு மீனவர் நலவாரியம் ஆகியவற்றின் கீழ் நிவாரண உதவி

பெறப்படும் வரை வழங்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ.13.67 இலட்சம் தின உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.9 இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவரது குடும்பத்தினருக்கு/காயமடையும் மீனவருக்கு நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள், பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக்–வளைகுடா பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல்/ துன்புறுத்தப்படுதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்வதோடு, சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளின் போது மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில்

பொருளீட்டக்கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறுகாயம் அடையும் போது முறையே ரூ.50,000 மற்றும் ரூ.20,000 கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

இலங்கை கடற்படையினரின் கப்பல், மீன்பிடி படகின் மீது மோதிய விபத்தில் இறந்த ஒரு மீனவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது.மேலும் மற்றொரு சம்பவத்தில் சிறு காயம் அடைந்த ஒரு மீனவருக்கு கருணை தொகையாக ரூ.20,000 வழங்கப்பட்டது.

### 5.1.10 புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

கடலோர மீன்வளங்களை பாதுகாப்பதன் மூலம் நிலையான மீன்வளத்தைப் பெருக்கவும், அதிகம் பிடிக்கப்படாத ஆழ்கடல் மீன்வளங்களான சூரை மீன் மற்றும் அதுபோன்ற மீன் இனங்களை மீனவர்கள் பிடிப்பதை ஊக்கப்படுத்திடவும், 'தூண்டில் மற்றும் செவுள் வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகுகள்' வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், படகு ஒன்றினை கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மதிப்பான ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை ரூ.51.30 கோடி திட்ட மதிப்பீட்டில் 171 சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஐந்து படகுகளின் கட்டுமான பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன. பரிசீலனைக்கு பிறகு எஞ்சிய 67 படகுகளுக்கு பணியாணை வழங்கப்படும். 99 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும்

அதற்கென ரூ.29.41 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

**II. மத்திய அரசு பங்களிப்பு திட்டங்கள்**

**5.1.11 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்**

இத்திட்டம் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) மூலம் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் (PMMSY) கீழ் மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தின் கீழ் விபத்தில் இறந்த மீனவருக்கு ரூ.5 இலட்சம் மற்றும் காயமடைந்த மீனவருக்கு ரூ.2.50 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் ஆண்டிற்கு 5,23,237 மீனவர்களுக்கு மாநில அரசின் பங்கு தொகையான ரூ.1.19 கோடி செலுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் காப்புறுதி காலம் 18.10.2021 முதல் 25.07.2022 வரை ஆகும்.

இக்காப்பீட்டு திட்டம் இந்த ஆண்டிலும் புதுப்பிக்கப்படும்.

**5.1.12 பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்**

மீனவர்கள் வெளிப்பொருத்தும் இயந்திரம்/ உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு இயந்திரத்தின் ஒரு அலகிற்கான விலையில் 40 விழுக்காடு அல்லது ரூ.48,000, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில், மாநில அரசின் திட்டத்தின் கீழ், பாரம்பரிய நாட்டுபடகு மீனவர்களுக்கு 1,374 உட்பொருத்தும்/ வெளிபொருத்தும் இயந்திரங்கள் ரூ.4.80 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2021-22ஆம் ஆண்டிற்கு, இத்திட்டத்தின் கீழ் ரூ.24 கோடி திட்ட மதிப்பீட்டில் 2,000 இயந்திரங்களை வழங்கிட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.9.71 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளது.

### 5.1.13 பாரம்பரிய நாட்டுப்படகுகளுக்கு மாற்றாக கண்ணாடி நாரிழைப்படகு மற்றும் இதர உபகரணங்கள் வாங்க மானியம் வழங்குதல்

பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடித் திறனை மேம்படுத்திடும் பொருட்டு மரத்திலான படகுகளுக்கு மாற்றாக, கண்ணாடி நாரிழைப் படகுடன் வலைகள், வெளிப்பொருத்தும் இயந்திரம் மற்றும் குளிர்காப்பு பெட்டி வழங்குவதற்கு 40% மானிய உதவி வழங்கப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தின் கீழ், 200 கண்ணாடி நாரிழைப் படகுகள் மற்றும் உபகரணங்களை ரூ.8.50 கோடி திட்ட மதிப்பீட்டில் வழங்கிட அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நீலப்புரட்சி திட்டத்தின் கீழ் 100 அலகுகளுக்கு, அலகு ஒன்றிற்கு ரூ.4.25 இலட்சம் என்ற மதிப்பில் மானியத் தொகையாக ரூ.1.7 இலட்சம் வழங்கப்படும். 'பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்' கீழ் 100 அலகுகளுக்கு, அலகு ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் என்ற மதிப்பில், 40 விழுக்காடு மானியத் தொகை அல்லது அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

## 5.2 மீன்பிடி ஒழுங்குபடுத்துதல் மற்றும் சட்ட அமலாக்கம் செய்தல்

### 5.2.1 மீன்பிடி கலன்களை பதிவுசெய்தல்

கடலோர பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு, மீன்பிடி கலன்கள் இணையதளம் மூலம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், **5,924** மீன்பிடி விசைப்படகுகள், **40,181** இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் **3,801** இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகள் 31.03.2022 வரை 'ReAlCraft' இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 5.2.2 கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்ட அமலாக்கப்பிரிவு

தமிழ்நாடு கடல்மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடவும், சட்டத்திற்கு முரணான மீன்பிடிப்பை தடுத்தல், மீன்வள ஆதாரத்தை பாதுகாத்தல், மீன்பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்துவதற்கு அமலாக்கப் பிரிவு, 112 பணியிடங்களில் 92 காவல்துறை அலுவலர்களுடன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 14 கடலோர மாவட்டங்களில், கடலில் மீன்பிடி

ஒழுங்குமுறைச் சட்டத்தினை (1983) அமலாக்கம் செய்திட, ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், 10 காவல் ஆய்வாளர்கள், எட்டு காவல் சார்–ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 19 காவல் ஓட்டுநர்கள் ஆகிய நிரந்தரப் பணியிடங்களைக் கொண்டு இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

சட்டத்திற்கு புறம்பான மீன்பிடித்தல், அழிவை ஏற்படுத்தும் மீன்பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதை தடுத்தல் மற்றும் மீன்பிடித்தலில் ஒழுங்குமுறையை நிலைநாட்டிட கடலில் ரோந்து பணி மேற்கொள்ளுதல், ரோந்துப் பணியின் போது சேகரிக்கப்படும் சமூகவிரோத செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களை கடலோர பாதுகாப்புப்படை மற்றும் உள்ளூர் காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கிய பணிகளை இந்த அமலாக்க பிரிவு மேற்கொண்டு வருகிறது.

அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகளுக்கென ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.8.65 கோடி அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 5.3 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

மீன்வளத்தினை பாதுகாத்திடவும், அதிகரித்திடவும், மீன்பிடித் தடைக்காலம் அமலாக்கம் செய்தல், கடலில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வகை மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகள் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீன்வளத்தினை திறனுடன் நிர்வகிக்க சுற்றுச்சூழலுக்குகந்த முறையில் கூட்டு மேலாண்மை தத்துவத்தின் அடிப்படையில் மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. மீனவ பங்களிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் மீன்வள ஆதாரங்களை திறனுடன் பாதுகாக்க இந்நடவடிக்கை உதவிடும். மாநிலத்திலுள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி இறங்கு தளங்கள் கூட்டு மேலாண்மை குழுக்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.3.1 மீன்பிடித் தடைக்காலம்

கடல் மீன்வளத்தைப் பாதுகாத்திட, ஒவ்வொரு ஆண்டும் மீன்களின் இனப்பெருக்க காலங்களில் தமிழக அரசால் அண்மைக் கடல் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல (EEZ) பகுதிகளில் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மீன்பிடித் தடைக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நடைமுறை நாட்டுப்படகுகளுக்கு பொருந்தாது. கிழக்கு கடற்கரை பகுதியில், ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும், 61 நாட்கள் மீன்பிடித் தடைக்காலம் அமல்படுத்தப்படுகிறது.

### 5.3.2 கடல் ஆமைகளை பாதுகாத்தல்

தமிழக கடற்பகுதியில் கடல் ஆமைகளை பாதுகாத்திடும் பொருட்டு, மீன்பிடி இழுவலைகளில் கடல் ஆமைகள் சிக்காமல் வெளிச்செல்ல ஏதுவாக, இழுவலைகளில் உள்ள தூர்மடியில் Turtle Excluder Device (TED) கருவிகள் பொருத்திடவும், ஒவ்வொரு ஆண்டும் கடல் ஆமைகளின் இனப்பெருக்கக் காலமான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 முடிய நான்கு மாதங்களுக்கு கடல் ஆமைகள் முட்டையிடும் கடற்பகுதியின் 5 கடல் மைல்களுக்குள் அனைத்து

வகை படகுகளும் மீன்பிடிக்கத் தடையாணை பிறப்பித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

## 5.4 பேரிடர் தயார்நிலை, மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்

மோசமான வானிலை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

அ) மீனவர்களுக்கு வானிலை மற்றும் புயல் எச்சரிக்கை தகவல்களைப் பகிர்தல்.

ஆ) வானிலைத் தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு 24 மணி நேரமும் வழங்கிடத் தேவையான தொலைதொடர்பு வசதிகளுடன் கூடிய மத்திய கட்டுப்பாட்டு அறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்தக்கட்டுப்பாட்டு அறைப்பணிக்காக பிரத்தியேக தொலைபேசி எண். 044–29530392 வழங்கப்பட்டுள்ளது.

இ) தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் கடலோர காவல் குழுமம், இந்திய கடலோர காவல் படை

மற்றும் இந்திய கப்பல்படை ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

### 5.4.1 கடலில் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பிற்கான நடவடிக்கைகள்

#### 5.4.1.1 கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்குதல்

கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கி தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு 18 தொலைதொடர்பு கோபுரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலில் உள்ள மீனவர்கள் தங்கள் மீன்பிடி கலன்களிலிருந்து கரைப்பகுதியினை தொடர்பு கொள்ள ஏதுவாக 15 இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு விலையில்லா 5 வாட் வி.எச்.எப். கருவிகள் 17,795 எண்ணம் மற்றும் விசைப்படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 3,135 எண்ணம் 25 வாட் வி.எச்.எப். கருவிகளும், ஆக மொத்தம் 20,930 வி.எச்.எப். தொலைதொடர்பு கருவிகள் துறையால் வழங்கப்பட்டுள்ளது.

### 5.4.1.2 விசைப்படகுகளில் 'டிரான்ஸ்பாண்டர்கள்' (Transponders) பொருத்துதல்

ஒன்றிய அரசானது, 200 கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும், மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும் பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் மூலம் டிரான்ஸ்பாண்டர்களை உருவாக்கியுள்ளது.

தமிழகத்தில் உள்ள 4,997 விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்களை பொருத்திடும் பொருட்டு ஒன்றிய அரசு ரூ.18.01 கோடி நிதி விடுவித்துள்ளது. 15 முன்மாதிரி டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்பட்டு களஆய்வில் உள்ளது. விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தும் பணி இவ்வாண்டில் முழுமையாக முடிக்கப்படும்.

### 5.4.1.3 செயற்கைகோள் தொலைபேசி, "நேவிக்" (NAvic) மற்றும் "நேவ்டெக்ஸ்" (NAVtex) தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பினை உறுதி செய்யும் வகையில்

80 விசைப்படகு குழுக்களுக்கு ரூ.2.28 கோடி செலவில் 160 செயற்கைகோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் ஆகிய தொலைதொடர்பு கருவிகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன.

ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு மானிய விலையில் 500 விசைப்படகுகளுக்கு செயற்கைகோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 5.4.1.4 "தூண்டில்" – கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவை

மீன்பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடி கலன்களை கண்காணிப்பதின் மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விபரங்களை பதிவு செய்திடவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, ஒன்றிய அரசின் புவிஅறிவியல் அமைச்சகத்தின் (MoES) தேசிய கடலோர ஆராய்ச்சி நிலையத்துடன் (NCCR) இணைந்து, இணையதள சேவை மூலம் "தூண்டில்" எனும் கைபேசி செயலி இயக்கப்படுகிறது.

இந்த "தூண்டில்" எனும் கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவையானது, அரசு நிர்வாகத்திற்கு உதவுவதுடன், கடலில் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், கடற்பயண பதிவுகள், பாதுகாப்பான இடம் செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் பகுதிகளை கைபேசியில் பதிவு செய்தல், மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களை பெறுதல், மாறி வரும் வானிலை, புயல், அதிக மழை மற்றும் உயரும் கடல் அலைகள் போன்ற விவரங்களை மீனவர்கள் உடனடியாக அறிந்து கொள்வதன் மூலம் தங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் உதவுகிறது.

### 5.4.2 அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகளுக்கு நிவாரணம் வழங்குதல்

அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகள்/ மீன்பிடி உபகரணங்கள்/ வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும் பொருட்டு, ஒரு கடலோர மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் அனைத்து கடலோர மாவட்டங்களுக்கும் ரூ.1.30 கோடி சுழல் நிதியம் தமிழக அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் மோசமான வானிலையால் சேதமடைந்த 28 படகுகளுக்கு ரூ.10.49 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

### 5.4.3 புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்:

#### 5.4.3.1 'டவ்தே'புயல் :

'டவ்தே' புயலின் போது இரண்டு நிகழ்வுகளில் 21 தமிழ்நாடு மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போயினர். இவ்விரு நிகழ்வுகளிலும் காணாமல் போன 21 தமிழக மீனவர்களை கண்டுபிடிக்க இயலாத சூழலில், அவர்களது குடும்பத்தாரின் துயர்துடைக்கும் பொருட்டு காணாமல் போன மீனவர்களது குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் ரூ.4.20 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

#### 5.4.3.2 வடகிழக்கு பருவமழை 2021

வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த 2021 ஆம் ஆண்டு உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் வீசிய காற்று மற்றும் கனமழை காரணமாக திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம்,

கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களை சேர்ந்த விசைப்படகுகள், கண்ணாடி நாரிழைப் படகு, கட்டுமரம், மீன்பிடி வலைகள் மற்றும் மீன் பண்ணைகள் சேதமடைந்தது. அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்திற்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.01.2022 அன்று ரூ.5.66 கோடியினை நிவாரணமாக அறிவித்ததைத் தொடர்ந்து அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 5.5 தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

### 5.5.1 கச்சத்தீவினை திரும்ப பெறுதல்

பாக் நீரிணை பகுதியில் 2,490 விசைப்படகுகள், 12,443 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 1,020 நாட்டு படகுகள் பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. பாக் நீரிணை பகுதி மாவட்டங்களில் உள்ள 286 மீனவ கிராமங்களில் 2,08,827 மீனவ மக்கள் வாழ்கின்றனர். பாக் நீரிணை பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் சுமார் 80,000 மீனவர்கள் நேரடியாக மீன்பிடி தொழிலை நம்பியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடற்பகுதியில் மீன்பிடிக்கும்போது சர்வதேச கடல் எல்லையை கடப்பதாக கூறி இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். இலங்கை அரசால் நமது மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது தமிழக மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, "கச்சத்தீவை" மீட்டெடுத்து மீண்டும் இந்தியாவிற்கு கிடைப்பது மற்றும் பாக் நீரிணை பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது தமிழக அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது. தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், 1974ல் இந்திய அரசால் இலங்கைக்கு ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்ட "கச்சத்தீவை" மீட்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றத்திலும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழக

அரசும் வாதியாக இணைந்து, கச்சத்தீவை மீட்க இந்திய அரசை வலியுறுத்தியது.

அதன்பின் SLP.எண்.8013/2017ல், தனி நபர் ஒருவர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 6வது பிரிவைச் செயல்படுத்த/ அமுல்படுத்த இந்திய ஒன்றியத்திற்கு எதிராக மனுத்தாக்கல் செய்துள்ளார். அத்துடன் அவ்வொப்பந்தம் தொடர்பான 23.03.1976 நாளைய கடிதத்திலுள்ள ஆட்சேபனைக்குரிய பிரிவுகளை நீக்கிட கோரியுள்ளார். தமிழக அரசு 05.08.2021 அன்று மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தில் எதிர் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 17.06.2021 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு வழங்கிய கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், 01.04.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களுக்கு நிரந்தர தீர்வு காணவேண்டியும், பாரம்பரிய கடற்பகுதியில் தங்களது மீன்பிடி

உரிமையை மீட்டெடுப்பதற்கும் மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். எனவே, மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதை தமிழக அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

### 5.5.2 இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் முடக்கி வைக்கப்பட்டுள்ள அவர்களின் படகுகளை விடுவித்தல்

தமிழக மீனவர்கள் பாரம்பரியமான பாக்–வளைகுடா பகுதியில் தங்கள் மீன்பிடிப்பை மேற்கொள்ளும் போது சர்வதேச கடல் எல்லையை தாண்டுவதாக தெரிவித்து, இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் தொடர் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுதல், துன்புறுத்தப்படுதல், சிறைபிடிக்கப்படுதல் போன்ற சம்பவங்களால்

பாதிக்கப்படும் போது, அவர்களை விடுவிக்க வலியுறுத்தி தமிழ்நாடு அரசு பல்வேறு கடிதங்கள் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு, கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு தூதரக ரீதீயிலான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது. இதற்கு முன்பு அதிகபட்சமாக 113 நாட்கள் வரை இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தமிழக மீனவர்கள், இந்த அரசு பதவியேற்றவுடன் எடுத்த முயற்சிகளினால், மிககுறைந்த காலமான பதினாறு நாட்களிலேயே தாய்நாடு திரும்பியுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசால் பிடிக்கப்பட்ட 88 படகுகள் மற்றும் 23 மீனவர்களை (31.03.2022 வரை) மீட்க அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. மேலும், 01.04.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் இலங்கை அரசால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்க, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம்,

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார்.

### 5.5.3 இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு மீட்க இயலாத நிலையில் உள்ள படகுகளுக்கு நிவாரணம்

இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு பல்வேறு கடற்படை தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 125 படகுகளில் 108 விசைப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும், 14 நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.5.66 கோடி வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.01.2022 அன்று அறிவித்ததன் அடிப்படையில், 122 படகுகளுக்கு நிவாரணமாக மொத்தம் ரூ.5.61 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு நிவாரணம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.5.4 மீன்வளத்திற்கான இந்திய–இலங்கை கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் (JWG)

மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகளை விடுவிப்பது, ரோந்து, கைது நடவடிக்கையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் / நெறிமுறைகள் மற்றும் மீனவர்களை மனிதாபிமான முறையில் கையாளுவது குறித்து மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் (JWG) நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஐந்து சுற்றுகள் இந்திய–இலங்கை கூட்டு பணிக்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த கூட்டங்களின்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவித்து, திருப்பி அனுப்புவது குறித்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

இந்தியா மற்றும் இலங்கை இடையே மீன்பிடித் தொழில் தொடர்பான ஐந்தாவது கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் 25.03.2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது தரப்பில் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் பின்வருமாறு;

i. மீன்பிடிப்பின் பொழுது ரோந்துப் பணியில் கூடுதல் ஒத்துழைப்பு நல்குதல்,

ii. தமிழக மீனவர்களின் சமீபத்திய மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையினை பகிர்தல்,

iii. கைது நடவடிக்கையின் போது அதிகபட்ச முன்னெச்சரிக்கை மற்றும் மனிதாபிமான அணுகுமுறையை கையாளுதல்,

iv. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமான படகுகளை மனிதாபிமான அடிப்படையில் விடுவித்தல்,

v. இலங்கை மீன்பிடிச் சட்டத் திருத்தம், 2018க்கு முன்னர் கைது செய்யப்பட்ட தமிழக மீன்பிடி படகுகளை விடுவித்தல்,

vi. பாக் நீரிணை பகுதியில் கடல் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கு கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன,

vii. அண்மைக் கடல் பகுதியில் மீன்பிடி அழுத்தத்தைக் குறைக்க, பாக் நீரிணை பகுதியின் கடல் சூழலைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து விவரிக்கப்பட்டது,

viii. இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் பதற்றத்தை தணிக்க மீனவர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடத்த கோரப்பட்டது.

## 5.6 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

### 5.6.1 கடலோர இறால் வளர்ப்பு

தமிழ்நாட்டில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு உகந்த 12,000 ஹெக்டேர் நிலப்பரப்பில், தற்பொழுது 6,500 ஹெக்டேர் பரப்பளவு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. தமிழக கடலோர நிலப்பரப்பில், இறால் வளர்ப்பு முக்கிய தொழிலாக மேற்கொள்ளப்படுவதுடன், தற்போது 1,932 இறால் பண்ணைகள் 3,837.33 ஹெக்டேர் பரப்பில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு பெற்று இயங்கி வருகின்றன. தமிழகத்தில் இயங்கி வரும் 71 இறால் குஞ்சு பொரிப்பகங்கள் தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களுக்குத் தேவையான இறால் குஞ்சுகளை வழங்கி வருகின்றன.

இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 82 பதிவு செய்யப்பட்ட இறால் குஞ்சு பொரிப்பகங்களிலிருந்து 7,000 கோடி இறால் குஞ்சுகள் உற்பத்தி

செய்யப்படுகிறது, தமிழகத்தில் 40 பில்லியன் உற்பத்தி திறன் கொண்ட பொரிப்பகங்களிலிருந்து 25 பில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இது தேசிய உற்பத்தியில் சராசரியாக 30 விழுக்கடு ஆகும்.

நாட்டின் மொத்த இறால் உற்பத்தியான 7.5 இலட்சம் மெட்ரிக் டன்னில் 25,000 மெட்ரிக் டன் தமிழ்நாடு உற்பத்தி செய்து உள்ளது. தமிழகத்தில், தற்போது 'வெள்ளை இறால்' (*Penaeus vannamei*) பெருமளவில் வளர்க்கப்படுகிறது. இவ்வகையான இறால்களை வளர்த்திட பிரத்யேக அனுமதியினை மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி கடலோர உயிரின வளர்ப்பு ஆணையம் வழங்குகிறது.

தமிழ்நாட்டில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை பெருக்கிட வளம் மிகுந்திருப்பினும் தற்பொழுது 13% மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. தமிழக அரசால், உவர்நீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்பிற்கு உகந்த இடங்களை கண்டறிந்து வரைபடம் தயாரிக்கும் பணிகள் (Resource

Mapping) செய்து முடிக்கப்பட்டுள்ளது. இறால் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக அரசு கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடலோர தரிசு நிலங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த இறால் வளர்ப்பினை மேற்கொள்ள நில குத்தகை கொள்கையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயத்திற்கு பயன்படாத தரிசு நிலங்களில் உவர்நீர் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் கடலோர பகுதிகளில் உள்ள பெரிய உவர் நிலப்பரப்புகள் கண்டறியப்பட்டு, பிரத்யேக உவர்நீர் மீன்வளர்ப்பு மண்டலங்கள் உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.6.2 கடல் உயிரின வளர்ப்பு

கடலில் மீன்பிடி உற்பத்தி அளவு தேக்க நிலையினை அடைந்துள்ளது, இதனால் கடலில் மீன்வளர்ப்பு மூலம் மீன் உற்பத்திக்கான சாத்திய கூறுகளை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது. கடலில் மீன் வளர்ப்பு முறையானது மீனவர்களை மீன்பிடி தொழிலில் இருந்து, மீன்களை இருப்பு செய்தல் மற்றும் அறுவடை செய்தல் என்ற புதிய மாற்றத்திற்கு வழி வகுக்கிறது.

ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ள தேசிய கடல் உயிரின வளர்ப்பு கொள்கையின்படி, அரசு கடலில் மீன்வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் அண்மை கடல் பகுதியில் பல்வேறு மீன்வளர்ப்பிற்கு உகந்த பகுதிகளை அறிவியல் தொழில்நுட்பம், உள்ளூர் சமூக கலாச்சார பண்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அடிப்படையில் வரையறை செய்து அண்மை கடல் பகுதியில் மீன் வளர்ப்பினை மேற்கொள்ள அரசின் மூலம் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.6.3 கடற்பாசி வளர்ப்பு

கடற்பாசிகள் ஆழமற்ற கடலோர பகுதிகளில் வளரும் பாசி வகையை சார்ந்ததாகும். கடற்பாசிகள், சிவப்பு, பழுப்பு மற்றும் பச்சை கடற்பாசி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய கடற்பரப்பில் 844 வகையான கடற்பாசிகள் உள்ளன. இவைகளில் 60 இனங்கள் வணிகரீதியாக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன, இதில் 10 கடற்பாசி இனங்கள் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன.

தமிழகத்தில், கடற்பாசி வளர்ப்பை, மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கையாக ஊக்குவிப்பதற்கு, மீன்வளம் மற்றும்

மீனவர் நலத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் பல்வேறு திட்டங்களின் கீழ், 1,926 மீனவப் பெண்களுக்கு கடற்பாசி வளர்ப்பினை மேற்கொள்ள 16,262 எண்ணிக்கையிலான கடற்பாசி மிதவைகள் மற்றும் கடற்பாசி வளர்ப்பிற்கான கயிறுகள் (monolines) வழங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு அரசின் முயற்சியால் தமிழகத்தில் தற்போதைய கடற்பாசி உற்பத்தி ஆண்டொன்றுக்கு சராசரியாக 10,000 மெட்ரிக் டன்களாக உள்ளது.

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் அறிவியல்பூர்வ மற்றும் பாரம்பரிய கடற்பாசி வளர்ப்பின் மூலம் அதன் உற்பத்தியை பெருக்கிட, பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய பல்நோக்கு கடற்பாசி பூங்காவை ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து தமிழகத்தில் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அட்டவணை: 4**

| மையம் I – கடற்பாசி விதை வளர்ப்பு பூங்கா | மையம் II – கடற்பாசி பதப்படுத்தும் பூங்கா |
|---|---|
| ➢ கடற்பாசி திசு வளர்ப்பு ஆய்வு கூடம்<br>➢ உட்புற இளம் தாவர வளர்ப்பு அலகு<br>➢ வெளிப்புற கடற்பாசி விதை வளர்ப்பு குளம்<br>➢ பயிற்சி வளாகம்<br>➢ உலர் தளங்கள்<br>➢ நீர் பரிசோதனை ஆய்வகம்<br>➢ குளத்தில் கடற்பாசி வளர்ப்பிற்கான இடம்<br>➢ நீரேற்று அமைப்பு மற்றும் நீர்த்தேக்கங்கள்<br>➢ கழிவுநீர் சுத்தீகரிப்பு நிலையம்<br>➢ உப்புநீரை குடிநீராக்கும் வசதி<br>➢ சாலை அமைப்பு மற்றும் மின்சார வசதி | ➢ கடற்பாசி பதனிடும் தொழிற்சாலை மனைகள்<br>➢ நிர்வாகக் கட்டிடம்<br>➢ புதிய கண்டுபிடிப்புகள்/ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்<br>➢ சோதனை ஆய்வகம்<br>➢ உலர் தளங்கள்<br>➢ சேமிப்பு கிடங்குகள்<br>➢ ஒற்றை சாளர அலுவலகம்<br>➢ நன்னீர் சுத்தீகரிப்பு நிலையம் மற்றும் நீர்த்தேக்கம்<br>➢ தொழில் முனைவோர் உருவாக்க மையம்<br>➢ கழிவுநீர் சுத்தீகரிப்பு நிலையம்<br>➢ சாலை அமைப்பு மற்றும் மின்சார வசதி |

### 5.6.4 கடற்கூண்டுகளில் மீன்வளர்ப்பு (Open Sea Cage Culture)

தமிழகத்தில் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள நீண்ட கடற்கரை, அமைதியான கடல் பகுதிகள் கூண்டு மீன்வளர்ப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளன. மேற்கூறிய பகுதிகளில் கூண்டு மீன்வளர்ப்பை விரிவுபடுத்துவதன் மூலம் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடிப்பில் ஏற்படும் அழுத்தத்தை குறைப்பதற்கு வாய்ப்புள்ளது. கடல் கூண்டுகளில் மீன்வளர்ப்பதன் மூலம் விலை மதிப்புமிக்க கடல் மீன்கள் உற்பத்தியினை அதிகரிக்க இயலும். கடல் விரால் (Cobia), கொடுவா (Seabass), கலவா (Grouper), பாம்பனோ பாறை (Silver pompano) மற்றும் சிங்கி இறால் (Lobster) போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்களை கூண்டுகளில் வளர்த்திட இயலும். பல்வேறு ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் கீழ் இதுவரை ரூ.947.29 இலட்சம் செலவில் 220 மிதவைக் கூண்டுகள் கடலோர மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடலில் கூண்டுகள் அமைத்து மீன்வளர்ப்போருக்கு தேவையான அளவு கடல் மீன் குஞ்சுகளை வழங்குவதற்காக இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் கடல் மீன் குஞ்சு வளர்ப்பு மையம் மாநில அரசால் நிறுவப்பட்டுள்ளது.

## 5.7 மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதியுதவி பெற்று தமிழகத்தில் உள்ள மீன் இறங்கும் பகுதிகளை மீன் இறங்குதளங்களாகவும், மீன் இறங்குதளங்களை மீன்பிடி துறைமுகங்களாகவும் தரம் உயர்த்திடவும், தற்பொழுது உள்ள மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களை நவீனப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம், மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்திடவும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும், ஏற்றுமதி வாய்ப்புகளை எற்படுத்தி மீனவர்களுக்கு கூடுதல் விலை கிடைத்திடவும் வழிவகை செய்யப்படுகிறது. மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படுவதால் மீனவர்கள் மற்றும் பொது மக்களுக்கு

நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

### 5.7.1 மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் ரூ.120 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, அரசின் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடிதுறைமுகம் 340மீ நீளமுள்ள வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 1,070மீ நீளமுள்ள தெற்கு அலைத் தடுப்புச்சுவர்களுடன், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

### 5.7.2 திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர்குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைத்திட மீன்வள உட்கட்டமைப்பு

மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடி துறைமுகம் 510மீ நீளமுள்ள வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 849மீ நீளமுள்ள தெற்கு அலை தடுப்புச்சுவர்களுடன் சூரை மீன்கள் மற்றும் ஆழ்கடல் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 80% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.3 நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் நவீன வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடி துறைமுகம் 1080மீ நீளமுள்ள வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 1,300மீ நீளமுள்ள தெற்கு அலைத்தடுப்புச்சுவர், 240மீ நீளமுள்ள படகு அணையும் தளங்களுடன், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர

கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

**5.7.4 கடலூர் மாவட்டம் முதுநகர் மீன்பிடித் துறைமுகத்தினை புனரமைத்தல்**

கடலூர் மாவட்டம், முதுநகரில் மீன்பிடித் துறைமுகத்தினை புனரமைக்கும் பணிக்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அமைத்திட தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கூடுதல் வசதிகளுடன் படகு அணையும் சுவர் 1,040மீ நீளம், தடுப்புச்சுவர் 600மீ நீளம் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 90% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

**5.7.5 கழுவேலி ஆற்றின் கரையோரங்களில், விழுப்புரம் மாவட்டம் அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆலம்பரைகுப்பத்தில் மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல்**

கழுவேலி ஆற்றின் கரையோரங்களில், விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பத்திலும் மற்றும்

செங்கல்பட்டு மாவட்டம், ஆலம்பரைகுப்பத்திலும் மீன்பிடிதுறைமுகங்கள் அமைத்திட ரூ.235 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித்துறைமுகங்களை அமைப்பதற்கு மாநில கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் (CRZ) அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், நிலைப்படுத்தும் சுவர் 900மீ நீளம், படகு அணையும் சுவர் 1,100 மீ நீளம், கடற்கரை பாதுகாப்பு கட்டமைப்பு 300மீ நீளம், சாய்வு தளம் 2 எண்ணம், கரைகளை பலப்படுத்தும் பணி 400மீ நீளம், தூர்வாரி சமன்படுத்துதல் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.6 நாகப்பட்டினம் மாவட்டம் ஆற்காட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ரூ.150 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வடக்கு அலைத் தடுப்புச்சுவர் 1,650மீ நீளம், தெற்கு அலைத்தடுப்புச்சுவர் 2,000மீ நீளம், படகு அணையும் தளம் 340மீ நீளம், தூர்வாரி சமன்படுத்துதல் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, 40% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.7 கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டிணம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்பு சுவரை நீட்டித்தல் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டிணம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்பு சுவரை மத்திய நீர் மற்றும் மின்சக்தி ஆராய்ச்சி நிலையத்தின் (CWPRS) பரிந்துரையின்படி, 213 மீ நீளத்திற்கு நீட்டிக்கவும் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் ரூ.137 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

25% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.8 தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தில் படகு அணையும் தளம் (T-Jetty) விரிவாக்கம் செய்தல்

தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தில் படகு அணையும் தளத்தை விரிவாக்கம் செய்ய ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 50% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.9 தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் கூடுதல் படகு அணையும் தளம் அமைத்தல்

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் அதிகமான படகுகள் நிறுத்துவதற்கு, கூடுதல் படகு அணையும் தளம் அமைத்திட ரூ.25 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 10% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.10 இராமநாதபுரம் மாவட்டம் கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் 20% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.11 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் (வடக்கு) மற்றும் (தெற்கு) கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் (வடக்கு) மற்றும் (தெற்கு) கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைக்க ரூ.20 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 60% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

**5.7.12 இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடி துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர் காப்பு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடி துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர் காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் அமைக்க ரூ.20 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 30% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

**5.7.13 வானகிரி, கீழதோட்டம், வடக்கம்மாப்பட்டினம், புதுக்குடி மற்றும் கோட்டைபட்டினம் ஆகிய கிராமங்களில் மீன்இறங்குதளம் அமைத்தல் மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்**

மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி, தஞ்சாவூர் மாவட்டம், கீழதோட்டம், புதுக்கோட்டை மாவட்டம், வடக்கம்மாப்பட்டினம், புதுக்குடி மற்றும் கோட்டைபட்டினம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைக்கவும், நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை

ஏற்படுத்தவும் ரூ.28 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.14 திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.15 கடலூர் மாவட்டம், அன்னங்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகளை அமைத்தல்

கடலூர் மாவட்டம், அன்னங்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்களில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த ரூ.19.50 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

20% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.16 நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தில் மீன் இறங்கு தளத்தின் முகத்துவாரத்தினை தூர்வாருதல் மற்றும் அலை தடுப்புச்சுவர் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தில் உள்ள மீன் இறங்குதளத்தின் முகத்துவாரத்தினை தூர்வாருதல் மற்றும் வடக்கு அலை தடுப்புச்சுவர் அமைக்க ரூ.19.87 கோடிக்கு, நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 35% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.17 திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்துதல்

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்த ரூ.26.85 கோடிக்கு, நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சட்டபூர்வ அனுமதி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**5.7.18 இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர், தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம் கொடியம்பாளையம், சின்னமேடு ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல்**

இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர் மற்றும் தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம் சின்னமேடு மற்றும் கொடியம்பாளையம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடல் அரிப்பு தடுப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.31.50 கோடிக்கு, நபார்டு நிதியின்கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**5.7.19 கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைத்தல்**

கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.13.06 கோடிக்கு, நபார்டு நிதியின் கீழ் மாநில அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 40% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.20 இராமநாதபுரம் மாவட்டம், களிமண்குண்டு, தொண்டி மற்றும் முள்ளிமுனை கிராம மீன் இறங்கு தளங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்டம், களிமண்குண்டு, தொண்டி மற்றும் முள்ளிமுனை ஆகிய கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நபார்டு நிதியின் கீழ் ரூ.4.92 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 50% பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### 5.7.21 திருச்சி, கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரத்தில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்

திருச்சி, கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரத்தில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி மையங்கள் அமைத்திட மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.9.60 கோடிக்கு மாநில அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

**5.7.22 இராமேஸ்வரம், உவரி, பழவேற்காடு மற்றும் வாணியக்குடி ஆகிய இடங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க ஆய்வு பணிகள் மேற்கொள்ளுதல்.**

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் (ரூ.1 கோடி), திருநெல்வேலி மாவட்டம் உவரி (ரூ.1 கோடி), திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு (ரூ.1 கோடி) மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் வாணியக்குடி (ரூ.1 கோடி) ஆகிய இடங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க பல்வேறு ஆய்வு பணிகளை மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**5.7.23 தூத்துக்குடி மற்றும் குளச்சல் மீன்பிடி துறைமுகங்களை விரிவாக்கம் செய்திட பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொள்ளுதல்.**

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் (ரூ.1 கோடி) மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் மீன்பிடி துறைமுகத்தினை (ரூ.1 கோடி) விரிவாக்கம் செய்திட

பல்வேறு ஆய்வு பணிகளை மேற்கொண்டு விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.2 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**5.7.24 செங்கல்பட்டு மாவட்டம், கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம் கொக்கிலமேடு மற்றும் ஆழிகுப்பம் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகள்**

செங்கல்பட்டு மாவட்டம் கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம், கொக்கிலமேடு மற்றும் ஆழிகுப்பம் கிராமத்தில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.39 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.25 தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்துதல் மற்றும் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள்

தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி முகத்துவாரத்தினை நிரந்தரமாக நிலைப்படுத்திட தெற்கு அலைதடுப்பு சுவர் மற்றும் வடக்கு அலைதடுப்பு சுவர்களை முறையே 940 மீ மற்றும் 120மீ நீளத்தில் அமைத்து முகத்துவாரத்தை ஆழப்படுத்திட ரூ.45 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.26 தூத்துக்குடி மாவட்டம் ஜீவாநகர் (திருச்செந்தூர்), அமலிநகர், ஆலந்தலை, குலசேகரபட்டினம், வீரபாண்டியன்பட்டிணம் மற்றும் மீனவர் காலனி (தெர்மல் – II அருகில்) மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டம் ஜீவாநகர் (திருச்செந்தூர்), அமலிநகர், ஆலந்தலை, குலசோகரபட்டினம், வீரபாண்டியன்பட்டிணம் மற்றும் மீனவர் காலனி (தெர்மல்–II அருகில்) ஆகிய

இடங்களில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.17 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.27 மயிலாடுதுறை மாவட்டம் திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம், தூத்துக்குடி மாவட்டம் சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளங்களை மேம்படுத்தும் பணிகள்

மயிலாடுதுறை மாவட்டம் திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம், தூத்துக்குடி மாவட்டம் சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளங்களை மேம்படுத்த ரூ.66 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.28 செங்கல்பட்டு மாவட்டம் அங்காளம்மன் குப்பம், புதுநடுக்குப்பம், பழையநடுக்குப்பம், கரிக்காட்டுகுப்பம் மற்றும் செம்மஞ்சேரிகுப்பம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகள்

செங்கல்பட்டு மாவட்டம் அங்காளம்மன்குப்பம் புதுநடுக்குப்பம், பழையநடுக்குப்பம், கரிக்காட்டுகுப்பம்,

மற்றும் செம்மஞ்சேரி ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகளுக்காக ரூ.57 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**5.7.29 கன்னியாகுமரி மாவட்டம் கேசவபுத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பினை தடுப்பதற்காக கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமங்களில் மீன்இறங்குதளம் அமைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டம் கேசவபுத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமங்களில் கடலரிப்பினை தடுப்பதற்காக கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமங்களில் மீன்இறங்குதளங்கள் அமைக்க ரூ.101 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**5.7.30 கடலூர் மாவட்டம் வெள்ளார் முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள்**

கடலூர் மாவட்டம் வெள்ளார் முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்திட ரூ.70 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளார் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்திட, 512 மீ நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களும் மற்றும் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தில் 305 மீ நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

**5.7.31 கடலூர் மாவட்டம் பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம் எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகள் அமைக்கும் பணிகள்**

கடலூர் மாவட்டம் பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம் எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகளுக்காக ரூ.22 கோடி மதிப்பீட்டில் நபார்டு

நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.32 கடலூர் மாவட்டம் புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

கடலூர் மாவட்டம் புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளங்கள் அமைக்க ரூ.13 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.33 நாகப்பட்டினம் மாவட்டம் நம்பியார் நகர் பகுதியில் கடலரிப்பை தடுக்க நேர்கல் சுவர்கள் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம் நம்பியார் நகர் பகுதியில் கடலரிப்பை தடுக்க நேர்கல் சுவர்கள் அமைக்க ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.34 மயிலாடுதுறை மாவட்டம் வானகிரி மீன் இறங்குதளத்தை மேம்படுத்துதல்

மயிலாடுதுறை மாவட்டம் வானகிரி கிராமத்தில் படகு அணையும் சுவர் 580 மீ நீளம், நேர்கல் சுவர்கள் தெற்கு மற்றும் வடக்கில் தலா 245மீ நீளம் மற்றும் சிறிய நேர்கல் சுவர்கள் 50 மீ நீளம் (2 எண்ணம்) மற்றும் சாலை வசதிகளுடன் மீன் இறங்கு தளத்தினை மேம்படுத்திட ரூ.55 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.35 இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் உள்ள படகு அணையும் தளத்தினை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள்

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் 200 மீ நீளம் மற்றும் 150மீ நீளமுள்ள இரண்டு படகு அணையும் தளங்களை புனரமைத்து மேம்படுத்திட ரூ.22.77 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.36 இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வடக்கு பகுதியில் கடலரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வடக்கு பகுதியில் 843 மீ நீளத்தில் அலைதடுப்பு சுவர் (வடக்கு) அமைத்து, கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட ரூ.30 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.37 இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் தெற்கு கடலரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் தெற்கு பகுதியில் 1,032மீ நீளத்தில் அலைதடுப்பு சுவர் (தெற்கு) மற்றும் 84மீ நீளத்தில் நேர்கல் சுவர் அமைத்து கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட மற்றும் ஏலக்கூடம் அமைத்திடவும் ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

## 5.7.38 கன்னியாகுமரி மாவட்டம் கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல்

கன்னியாகுமரி மாவட்டம் கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்களை மேம்படுத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் கோடிமுனை பகுதியில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 160மீ மற்றும் 116மீ, சைமன் காலனி பகுதியில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 163மீ மற்றும் 100மீ மற்றும் குறும்பனையில் நேர்கல் சுவர் 100மீ நீளத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

## 5.7.39 விழுப்புரம் மாவட்டம் பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

விழுப்புரம் மாவட்டம் பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.14.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால்

நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.40 செங்கல்பட்டு மாவட்டம் புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்துதல் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

செங்கல்பட்டு மாவட்டம் புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி கடலரிப்பு தடுப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.9.70 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு நிதியின் கீழ் தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 5.7.41 மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டம்

தமிழ்நாடு அரசு கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 5,000 வீடுகள் கட்டி வழங்கிட ரூ.85 கோடி செலவினத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதனில் ரூ.61.97 கோடி பெறப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2,098 வீடுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு, 1,951 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

## 5.8 உள்நாட்டு மீன்வள மேம்பாடு

உள்நாட்டு மீன்வளப் பிரிவு மாநிலத்தின் ஊட்டச்சத்து தேவையினை பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகிப்பதுடன், கிராமப்புற மேம்பாட்டிற்கும், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை உருவாக்கி, மாநிலத்தின் சமூக பொருளாதார செழுமையினை உறுதி செய்திட வழிவகுக்கிறது. தற்பொழுது, தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மூலம் 75 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனினும், மாநிலத்தில் உள்ள தகுதியான அனைத்து நீர்நிலைகளிலும் இருப்பு செய்ய வேண்டிய மீன்குஞ்சுகளின் தேவை 100 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் தேவைக்கான இடைவெளியினை பூர்த்தி செய்திடும் விதமாக, அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் அரசு மற்றும் தனியார் மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களை அமைத்து மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு,**

- தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து மீன்வளர்ப்போருக்கு விநியோகித்தல்.
- மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்திட மீன்குஞ்சு உற்பத்தி திறனை அதிகரித்தல்.
- உள்நாட்டு நீர்வள ஆதாரங்களை பயன்படுத்தி மீன் உற்பத்தியினை அதிகரித்தல்.
- உள்நாட்டு நீர்வள ஆதாரங்களை புவியிடம் சார்ந்த குறியீடு செய்து மீன் உற்பத்தி திறனை மதிப்பிடுவதற்கும் மற்றும் உள்நாட்டு மீன்வள பிரிவின் எதிர்கால வளர்ச்சிக்காக திட்டமிடுதலுக்கும் பயன்படுத்துதல்.
- மீன்வளர்ப்பினை மேற்கொள்ள மானியம் வழங்கி மீன்வளர்ப்போரை ஊக்குவித்தல்.
- மீன்வளர்ப்புடன் ஒருங்கிணைந்த முறையில் விவசாயத்தை மேற்கொண்டு விவசாயிகளின் வருவாயினை இரட்டிப்பாக்குதல்.

- கூட்டு மீன்வளர்ப்பில் நீரின் பல்வேறு அடுக்குகளை தகுந்த முறையில் பயன்படுத்தி உற்பத்தி திறனை அதிகரித்தல்.
- கூட்டு முறை மீன்வளர்ப்பினை பிரபலப்படுத்தி உள்நாட்டு மீன் உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்.
- நாட்டின மீன் இனங்களை பாதுகாத்திட செயற்கை முறையில் இனவிருத்தி மேற்கொண்டு நீர்நிலைகளில் இருப்பு செய்தல்.
- மீன்வளர்ப்பு முறைகளை விரிவுபடுத்துதல் மூலம் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
- வேகமாக வளரும் மீன் இனங்களின் வளர்ப்பினை குறுகிய கால நீர்நிலைகளில் மேற்கொள்வதை ஊக்குவித்து குறுகிய கால நீர் இருப்பினையும் முறையாக பயன்படுத்துதல்.
- விலையுயர்ந்த மீன் இனங்களான விரால் மற்றும் நன்னீர் இறால் வளர்ப்பினை பிரபலப்படுத்தி கூடுதல் வருவாய் ஈட்டுதல்.

### 5.8.1 உள்நாட்டு மீன்வளக்கொள்கை

புரதச்சத்து மிக்க உணவினை ஊரக பகுதி மக்களுக்கு வழங்கிடவும், மேலும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்திடவும் வரைவு தமிழ்நாடு உள்நாட்டு மீன்வளக்கொள்கை தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களை முறையாக பராமரித்து, பாதுகாத்து நிலையான வாழ்வாதாரத்தினை வழங்கவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யவும், பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்தவும் வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

### 5.8.2 உள்நாட்டு மீன்வளத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்பு முயற்சிகள்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் மீன்வள மேம்பாட்டிற்கு உகந்ததாக உள்ளன. இந்த மீன்வள ஆதாரங்கள் பெரும்பாலும் பருவமழையை சார்ந்துள்ளன. குறைந்த மழை அளவு, மீன்களின் இனப்பெருக்க காலத்திற்கும் மற்றும் நீர்நிலைகளில் நீர் நிறைந்திருக்கும் கால அளவிற்கும் உள்ள

வேறுபாடுகள், நீர்நிலைகளில் குறைவான காலஅளவே நீர் நிறைந்திருத்தல் மற்றும் மீன்தீவனத்திற்காக அதிகப்படியான செலவினம் ஆகியவை உள்நாட்டு மீன் உற்பத்திக்கு சவால்களாகும்.

மேற்கூறப்பட்ட சவால்களை எதிர்கொண்டு உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட பின்வரும் சிறப்பு முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது:

- நீர்த்தேக்கங்கள் மற்றும் பாசனக் குளங்களில் மிதவை கூண்டுகள் மூலம் தீவிர மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பினை கூட்டு முறையில் மேற்கொள்ள ஊக்குவித்தல்.
- தரமான மீன்குஞ்சுகள் ஆண்டு முழுவதும் கிடைத்திட வழிவகை செய்தல்.
- தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தகுதியான நீர்நிலைகளில் மீன்குஞ்சு இருப்பினை மேற்கொண்டு முறையாக பயன்படுத்துதல்.

- தீவிர மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல் மற்றும் மீன்வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்தல்.
- வேகமாக வளரும் மீன் இனங்களின் வளர்ப்பினை ஊக்குவித்தல் மற்றும் மீன்வளர்ப்பிற்கு தேவையான மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு, மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா ஆகிய மீன்குஞ்சுகளை விநியோகித்தல்.
- தஞ்சாவூர் மாவட்டம் அச்சம்பட்டியில் அரசு மீன் தீவன உற்பத்தி ஆலை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் தரமான மீன் தீவனம் அரசு மீன்பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.
- சினை மீன்களின் தரத்தினை மேம்படுத்திட சேலம் மாவட்டம் மேட்டூர் மற்றும் ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அரசு மீன்பண்ணைகளில் தூய மரபின சினைமீன் வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- நவீன முறை தீவிர மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்களான உயிர்கூழ்ம முறையில் மீன்வளர்ப்பு மற்றும் நீரினை மறுசுழற்சி முறையினை பிரபலப்படுத்தி மீன் உற்பத்தியினை அதிகரித்தல்.

### 5.8.3 மாநிலத்தின் நாட்டின மீன்வகைகளை பாதுகாத்தல்

நாட்டின மீன் இனங்களை பாதுகாத்திட ஏதுவாக செயற்கை முறையில் மீன்குஞ்சு உற்பத்தி மேற்கொண்டு, நீர்நிலைகளில் இருப்பு செய்து நாட்டின மீன் இனங்களை புத்துயிரூட்டுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. சுவையிற்சிறந்த மற்றும் மருத்துவகுணம் வாய்ந்த நாட்டின மீன்களுக்கு அதிக தேவை உள்ளது.

பெருகி வரும் நாட்டின மீன் தேவையினை கருத்திற் கொண்டு அயிரை (*லெபிடோசெபாலிச்தைஸ் தெர்மாலிஸ்*), கரிமீன் (*எட்ரோப்லஸ் சுரடென்சிஸ்*), கல்பாசு (*லேபியோ கல்பாசு*) மற்றும் சேல்கெண்டை (*லேபியோ ஃபிம்பிரியேட்டஸ்*) ஆகிய நாட்டின மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்திடவும் மற்றும் ஊரக பகுதி மக்களுக்கு புரதம் மிகுந்த மீன் உணவு கிடைப்பதை

உறுதி செய்திட ஏதுவாக ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்களை மொத்தம் ரூ.5 கோடி செலவில் அமைத்திட அரசு அறிவித்துள்ளது. மாநிலத்தின் இயற்கை நீர்நிலைகளில் இம்மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதன் மூலம் நாட்டின மீன்வளத்தை பெருக்க இயலும். நாட்டின மீன்வளத்தை பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தலின் வாயிலாக இயற்கை நீர்நிலைகளை நம்பியுள்ள உள்நாட்டு மீனவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலும்.

### 5.8.4. மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் 37 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன, அதன் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு.

- தகுந்த நீர்நிலைகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.

- விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு தொழில் நுட்பங்களை வழங்குதல்.
- மீன்வளர்ப்பிற்கு மீனவ விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணமாக மானியம் வழங்குதல்.
- ஊரக பகுதிகளில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

### 5.8.5 நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை

நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை 62 நீர்த்தேக்கங்களில் இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உள்நாட்டு மீன்உற்பத்தியினை அதிகரித்தல், நிலையான மீன்வள மேலாண்மை மற்றும் நீர்த்தேக்கங்களை தங்களது வாழ்வாதாரமாக கொண்டுள்ள மீனவர்களின் வருவாயை அதிகரித்தல் ஆகியன நீர்த்தேக்க மீன்வள மேலாண்மையின் முக்கிய நோக்கங்களாகும்.

அரசிற்கு வருவாயினை அதிகரித்திட பொது ஏல ஒப்பந்தப்புள்ளி முறையில் நீர்த்தேக்கங்கள் மீன்பாசி குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன. சில நீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமம் வழங்குதல் மற்றும் பங்கு மீன்பிடிப்பு முறைகள்

கடைபிடிக்கப்பட்டு அதன் மூலம் உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

நீர்த்தேக்கங்களை மீன்பாசி குத்தகைக்கு விட்டதன் மூலம் 2021–22 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ.11.34 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

நீர்வள ஆதார துறையின் ஒத்திசைவின்படி இதர தகுதியான நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மையினை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

### 5.8.6 **அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்**

தமிழ்நாட்டில் 11 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மூலம் நுண்மீன்குஞ்சுகள் மற்றும் இளமீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன்வளர்ப்போருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் விபரம் பின்வருமாறு:

## அட்டவணை: 5

## அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

| வ. எண் | அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் | மாவட்டம் | உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகள் |
|---|---|---|---|
| 1. | பூண்டி | திருவள்ளூர் | இந்திய பெருங்கெண்டைகள் |
| 2. | சாத்தனூர் (TNFDC) | திருவண்ணாமலை | இந்திய பெருங்கெண்டைகள் |
| 3. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | மரபுவழி மேம்படுத்தப் பட்ட திலேப்பியா மற்றும் அமூர் கெண்டை |
| 4. | மேட்டூர் அணை | சேலம் | இந்திய பெருங்கெண்டைகள் |
| 5. | பவானிசாகர் | ஈரோடு | இந்திய பெருங்கெண்டைகள் |
| 6. | திருக்காம்புலியூர் | கரூர் | இந்திய பெருங்கெண்டைகள் |
| 7. | தட்டான்குளம் | தஞ்சாவூர் | இந்திய பெருங்கெண்டைகள் |
| 8. | கரந்தை | தஞ்சாவூர் | இந்திய பெருங்கெண்டைகள் |
| 9. | நல்லிக்கோட்டை | திருவாரூர் | இந்திய பெருங்கெண்டைகள் |
| 10. | மஞ்சளாறு | தேனி | மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா |
| 11. | மணிமுத்தாறு | திருநெல்வேலி | இந்திய பெருங்கெண்டைகள் |

அரசு மீன்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட முக்கியத்துவம் வழங்கி மாநிலத்தில் தரமான மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மூலம் 2021–22ம் ஆண்டில் 65.68 கோடி நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் மீன்குஞ்சு பொரிப்பகங்களை அமைத்திடவும் தனியார் பண்ணையாளர்களை ஊக்குவித்திடவும் அரசு மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

### 5.8.7. அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் 39 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் துறையின் கீழும், ஐந்து மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கீழும் செயல்பட்டு வருகின்றன. 2021–22ம் ஆண்டில் மொத்தம் 9.34 கோடி தரமான மீன் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை: 6

## அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

| **வ. எண்** | **அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்** | **மாவட்டம்** |
|---|---|---|
| **மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்** | | |
| 1. | பூண்டி | திருவள்ளூர் |
| 2. | செம்பரம்பாக்கம் | காஞ்சிபுரம் |
| 3. | ஆத்தூர் | செங்கல்பட்டு |
| 4. | மோர்தானா | வேலூர் |
| 5. | வீடூர் | விழுப்புரம் |
| 6. | லால்பேட்டை | கடலூர் |
| 7. | அகரம் | கடலூர் |
| 8. | அசூர் | திருச்சிராப்பள்ளி |
| 9. | குளித்தலை | கரூர் |
| 10. | திருக்காம்புலியூர் | கரூர் |
| 11. | நெய்தலூர் | தஞ்சாவூர் |
| 12. | அகரப்பேட்டை | தஞ்சாவூர் |
| 13. | கரந்தை | தஞ்சாவூர் |
| 14. | திருமங்கலக்கோட்டை | தஞ்சாவூர் |
| 15. | நல்லிக்கோட்டை | திருவாரூர் |
| 16. | தட்டாமனைப்பட்டி | புதுக்கோட்டை |

| வ. எண் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 17. | குருங்களூர் | புதுக்கோட்டை |
| 18. | கருவிடைச்சேரி | புதுக்கோட்டை |
| 19. | மேட்டூர் அணை | சேலம் |
| 20. | ஆணைமடுவு | சேலம் |
| 21. | பவானிசாகர் | ஈரோடு |
| 22. | ஒகேனக்கல் | தருமபுரி |
| 23. | சின்னாறு | தருமபுரி |
| 24. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 25. | பாம்பார் | கிருஷ்ணகிரி |
| 26. | கெலவரப்பள்ளி | கிருஷ்ணகிரி |
| 27. | சாத்தையாறு | மதுரை |
| 28. | வைகை அணை | தேனி |
| 29. | மஞ்சளாறு அணை | தேனி |
| 30. | அணைப்பட்டி | திண்டுக்கல் |
| 31. | பிளவக்கல் | விருதுநகர் |
| 32. | மானகிரி | சிவகங்கை |
| 33. | பிரவலூர் | சிவகங்கை |
| 34. | மணிமுத்தாறு | திருநெல்வேலி |
| 35. | கூனியூர் | திருநெல்வேலி |
| 36. | கடனா | தென்காசி |

| வ. எண் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 37. | பேச்சிப்பாறை | கன்னியாகுமரி |
| 38. | சிற்றாறு–I | கன்னியாகுமரி |
| 39. | சிற்றாறு–II | கன்னியாகுமரி |
| **தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்** | | |
| 40. | சாத்தனூர் | திருவண்ணாமலை |
| 41. | ஆழியாறு | கோயம்புத்தூர் |
| 42. | திருமூர்த்தி | திருப்பூர் |
| 43. | அமராவதி | திருப்பூர் |
| 44. | பாலாறு – பொருந்தலாறு | திண்டுக்கல் |

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி அணை, தருமபுரி மாவட்டம் தொப்பையாறு அணை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் கொளவாய் ஏரி ஆகிய மூன்று இடங்களில் மிதவை கூடுகளில் மீன்விரலிகள் வளர்த்தெடுத்தல் மேற்கொள்ளப்பட்டு தரமான மீன்விரலிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தனியார் மீன்பண்ணையாளர்களை ஊக்குவித்து தனியார் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களை

அமைத்திட அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் மானிய உதவிகளை வழங்கி வருகிறது.

சினை மீன்களின் முட்டையிடும் திறன் மற்றும் முட்டைகளின் பொரிக்கும் திறனை அதிகரித்திடவும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் மேட்டூர் அணை மற்றும் பவானிசாகர் அரசு மீன்பண்ணைகளில் தூய மரபின இந்திய பெருங்கெண்டை சினை மீன் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கங்கை நதியிலிருந்து இந்திய பெருங்கெண்டை மீன்கள் சேகரிக்கப்பட்டு அரசு மீன்பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு தூய மரபின மீன் குஞ்சுகளை விநியோகம் செய்து சினை மீன்கள் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் சினை மீன்களில் மரபு குறைபாட்டை தவிர்த்து தரமான சினை மீன்களை அதிகரித்திட இயலும். மேலும், தரமான மீன்குஞ்சுகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட மீன்விதை வங்கிகள் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் நிதி உதவியின் கீழ் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது.

### 5.8.8 அரசு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா பொரிப்பகங்கள் மற்றும் வளர்ப்பு நிலையம்

வேகமாக வளரும் மீன்களை குறுகிய கால நீர்நிலைகளில் இருப்பு செய்திடுவதை ஊக்குவித்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. துறையின் மூலம் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகங்களை கிருஷ்ணகிரி மற்றும் தேனி மாவட்டம், மஞ்சளாறு அணை அரசு மீன்பண்ணைகளில் அமைக்கப்பட்டு ஆண்டொன்றிற்கு 40 இலட்சம் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, மாநிலத்திலுள்ள மீன்வளர்ப்போருக்கும் மற்றும் அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கும் விநியோகித்து வருகிறது.

பெருகிவரும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு தேவையினை கருத்திற்கொண்டு திருநெல்வேலி மாவட்டம் கூனியூர் அரசு மீன்பண்ணையில் ஆண்டொன்றிற்கு 5 இலட்சம் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்விரலிகள் உற்பத்தி திறனுள்ள வளர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அரசு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா பொரிப்பகங்கள் மற்றும் மீன்விரலிகள் வளர்த்தெடுக்கும் நிலையம் உள்நாட்டு மீன்வளப் பிரிவின் மேம்பாட்டிற்கு வரப்பிரசாதமாக

அமைந்து தீவிர மீன்வளர்ப்பு மேற்கொள்வோருக்கு அதிக வருமானம் ஈட்டக்கூடியதாக விளங்குகிறது.

## 5.9 மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) 2020–21

அரசு மீன்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (FIDF) கீழ் 2020–21–ம் ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரம்பாக்கம், மதுரை மாவட்டம் சாத்தையாறு, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு மற்றும் தென்காசி மாவட்டம் கடானா ஆகிய ஐந்து அரசு மீன்பண்ணைகளை நவீனமயமாக்கிட ரூ.18.30 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.10. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2020–21

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2020–21ன் கீழ் மொத்தம் ரூ.11.94 கோடி செலவில் அரசு மீன்பண்ணைகளில் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட விவரங்கள் பின்வருமாறு:

## அட்டவணை: 7

| வ. எண் | திட்டம் | திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் வாயிலாக புவியிடம் சார் குறியீடு செய்தல் | 25.00 |
| 2 | நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் உள்ள 'ட்ரவுட்' மீன்குஞ்சு பொரிப்பகத்தினை புதுப்பித்தல் | 10.00 |
| 3 | அரசு மீன் பண்ணைகளில் தீவிர மீன் குஞ்சு வளர்ப்பு செய்திடும் வசதிகளை ஏற்படுத்துதல் | 80.00 |
| 4 | திருவள்ளூர் மாவட்டம் பூண்டி அரசு மீன்பண்ணையில் மீன்குஞ்சு வளர்ப்பு தொட்டிகள் அமைத்தல் | 109.00 |
| 5 | தேனி மாவட்டம் வைகை அரசு மீன்பண்ணையில் கூடுதல் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்துதல் | 142.00 |
| 6 | ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அரசு பழைய மீன்பண்ணையில் சினை மீன் குளங்களை புனரமைத்தல் | 368.00 |
| 7 | திருநெல்வேலி மாவட்டம் கூனியூர் அரசு மீன்பண்ணையில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்தல் | 379.53 |

| வ. எண் | திட்டம் | திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 8 | தேனி மாவட்டம் மஞ்சளாறு அணை அரசு மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் பொரிப்பகத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 81.25 |
| | **மொத்தம்** | **1,194.78** |

மேலும், அரசு 2020-21 ம் ஆண்டிற்கு பின்வரும் பயனாளிகள் சார்ந்த திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கி திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

**அட்டவணை**:8

| வ. எண் | திட்டம் | அலகு | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்திட மானியம் வழங்குதல் | 10 ஹெக்டேர் | 36.00 |
| 2 | மீன்வளர்ப்பினை அதிகரித்திட மீன்வளர்ப்போருக்கு மானியம் வழங்குதல் | 50 ஹெக்டேர் | 205.00 |
| 3 | கிருஷ்ணகிரி மாவட்ட பாசன குளங்களில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவித்தல் | 52 எண்ணம் | 315.12 |
| | **மொத்தம்** | | **556.12** |

## 5.11. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (2021-22)

அரசு மீன்பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு கீழ்க்காணும் திட்டங்களுக்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் ரூ.5.72 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. திட்ட விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை**:9

| **வ. எண்** | **திட்டம்** | **திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)** |
|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூரில் அரசு மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்தல் | 450.00 |
| 2 | சேலம் மாவட்டம் ஆணைமடுவு அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல் | 70.00 |
| 3 | கன்னியாகுமரி மாவட்டம் சிற்றாறு-2 அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல் | 32.00 |
| 4 | கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை அரசு மீன் பண்ணையினை மேம்படுத்துதல் | 20.00 |
| | **மொத்தம்** | **572.00** |

மேலும், அரசு 2021–22ம் ஆண்டிற்கு பின்வரும் பயனாளிகள் சார்ந்த பின்வரும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**அட்டவணை:10**

| **வ. எண்** | **திட்டம்** | **அலகு** | **தொகை** (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் கூட்டு மீன்வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பினை ஊக்குவித்தல் | 100 எண்ணம் | 25.25 |
| 2 | பண்ணைக்குட்டைகளில் நீர் சேமிப்பு திறனை மேம்படுத்திட அதிக அடர்த்தி பாலித்தீன் விரிப்புகளிட்டு மீன் வளர்த்தல் | 100 எண்ணம் | 75.75 |
| 3 | விரால் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட இடுபொருள் மானியம் வழங்குதல் | 100 எண்ணம் | 30.30 |
| | **மொத்தம்** | | **131.30** |

## 5.12. பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் (PMMSY) (2020-21)

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய மேம்பாட்டு திட்டங்களுக்கு பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் 2020-21ன் கீழ் அரசு ரூ.28.73 கோடி விடுவித்துள்ளது. அனைத்து திட்டங்களும் முன்னேற்றத்தில் உள்ளன, திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை:11**

| வ. எண் | திட்டம் | அலகு | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | மீன்விதை வங்கிகள் அமைத்தல் | 2 எண்ணம் | 1000.00 |
| 2 | ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டு திட்டம் | 5 எண்ணம் | 1108.25 |
| 3 | புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்தல் | 2 எண்ணம் | 25.00 |
| 4 | புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 10 ஹெக்டேர் | 32.20 |
| 5 | புதிய நன்னீர் மீன்வளர்ப்பு | 100 ஹெக்டேர் | 322.00 |

| வ. எண் | திட்டம் | அலகு | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| | குளங்கள் அமைத்தல் | | |
| 6 | நன்னீர் மீன்வளர்ப்பிற்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 100 ஹெக்டேர் | 184.00 |
| 7 | நடுத்தர உயிர்கூழ்ம (Bio-floc) மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 15 எண்ணம் | 98.00 |
| 8 | நீர் மறுசுழற்சி முறை மீன்வளர்ப்பு தொட்டிகள் அமைத்தல் | 20 எண்ணம் | 69.00 |
| 9 | சிறிய உயிர்கூழ்ம (Bio-floc) மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 10 எண்ணம் | 34.50 |
| | **மொத்தம்** | | **2,872.95** |

### 5.13 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் 2021-22

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வள மேம்பாட்டு திட்டங்களுக்கு பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் 2021-22ன் கீழ் ஒன்றிய அரசு ரூ.21.65 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை:12

| வ. எண் | திட்டம் | அலகு | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்தல் | 8 எண்ணம் | 200.00 |
| 2 | புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 40 ஹெக்டேர் | 280.00 |
| 3 | புதிய நன்னீர் மீன்வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 85 ஹெக்டேர் | 595.00 |
| 4 | நன்னீர் மீன்வளர்ப்பிற்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 85 ஹெக்டேர் | 340.00 |
| 5 | சிறிய உயிர்கூழ்ம (Bio-floc) மீன் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 100 எண்ணம் | 750.00 |
| | **மொத்தம்** | | **2,165.00** |

## 5.14 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (TN-IAMP)

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்-II, கடந்த 2018-19 முதல் 66 உபவடிநில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, பயன்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன்வள மேலாண்மை,

பண்ணைக்குட்டைகளில் வேகமாக வளரக்கூடிய மீன்கள் இருப்பு மற்றும் மீன் உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்திட உலக வங்கி மூலம் ரூ.39.50 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, மீன்வள மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2018–19 முதல் 2020–21 வரை ரூ.25.65 கோடி செலவில், பவானிசாகர் மற்றும் மேட்டூரில் தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி, மேம்பாடு மற்றும் பராமரிப்பு மையங்கள், மஞ்சளாறு அணை அரசு மீன் பண்ணையில் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா பொரிப்பகம் அமைத்தல், கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் அகரம் அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்துதல், 22,069 ஹெக்டேர் நீர்பாசன குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல், 843 பண்ணைகுட்டைகளில் மீன்வளர்த்தல், 58 மண்ணிலான மீன்குஞ்சு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணைகள், 61 கூடுகளில் மீன்குஞ்சு வளர்த்தல், 15 மிதவை கூடுகளில் மீன்வளர்த்தல், 440 மீன்பிடி உபகரணங்கள் மீனவர்களுக்கு பெற்று

வழங்குதல் மற்றும் 13 நவீன மீன்விற்பனை அங்காடிகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் 34 உபவடிநிலப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2021-22-ம் ஆண்டு, பின்வரும் மீன்வள திட்டங்களை செயல்படுத்திட ரூ.7.42 கோடிக்கு செலவின ஒப்பளிப்பு வழங்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை:13**

**தமிழ் நாடு நீர்வள நிலவளத் திட்டம்-II 2021-22**

| வ. எண் | திட்ட செயல்பாடு | அலகு |
|---|---|---|
| 1 | நீண்ட கால மற்றும் குறுகிய கால நீர் பாசன குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்புச்செய்தல் | 4,605 ஹெக்டேர் |
| 2 | பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பு | 343 எண்ணம் |
| 3 | மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல் | 55 எண்ணம் |
| 4 | கூடுகளில் மீன்குஞ்சு வளர்த்தல் | 39 எண்ணம் |
| 5 | மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணை அமைத்தல் | 27 எண்ணம் |

| வ. எண் | திட்ட செயல்பாடு | அலகு |
|---|---|---|
| 6 | நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல் | 2 எண்ணம் |
| 7 | மதிப்புமிக்க விரால் மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் வளர்ப்பு மையம் அமைத்தல் | 1 எண்ணம் |
| 8 | மாதிரி கிராம செயல்பாடுகள் | 13 எண்ணம் |

இத்திட்டத்தின் மூலம் 2022–23–ம் ஆண்டில் கீழ்க்காணும் மீன்வளத்திட்டங்கள் ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**அட்டவணை:14**

**தமிழ் நாடு நீர்வள நிலவளத் திட்டம்–II 2022–23**

| வ. எண் | திட்ட செயல்பாடு | எண்ணம் |
|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் மாவட்டம் ஒக்கூர் கிராமத்தில் புதியதாக மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைத்தல் | 1 |
| 2 | மடித்து எடுக்கக்கூடிய தொட்டிகளில் மீன்வளர்ப்பு | 40 |
| 3 | நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல் | 6 |

## 5.15 வண்ண மீன் வளர்ப்பு

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் வண்ண மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, வண்ண மீன் ஏற்றுமதியில் தமிழகம் நாட்டில் இரண்டாவது மாநிலமாக திகழ்கிறது. வண்ண மீன் உற்பத்தியை அதிகரித்திடவும் அதன் வாயிலாக வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் ரூ.469.34 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், முன்னோடி திட்டமாக வண்ணமீன் வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.150.87 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.74.58 இலட்சம் என மொத்தம் ரூ.225.45 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பல்வேறு இனங்களான கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்பு பண்ணைகள் புதிதாக அமைத்தல்/ புனரமைத்தல், நீர்த்தாவரம் வளர்த்தல் மற்றும் வண்ண மீன் வளர்ப்பு உபகரணங்களுக்கான விற்பனை நிலையம் அமைத்தல், வண்ண மீன் வளர்ப்பு தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே வண்ண மீன் வளர்ப்பு குறித்த

விழிப்புணர்வை ஏற்படுத்திட ஏதுவாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் வண்ண மீன் தொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2020–21 ஆம் ஆண்டிற்கு, ரூ.165 இலட்சம் மதிப்பிலான திட்டங்களுக்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வண்ண மீன் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 5.16 மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்துதல்

### 5.16.1 மீன்விற்பனை சந்தைகள் அமைத்தல்

பொதுமக்களுக்கு தரமான மீன்களை சுகாதாரமான முறையில் வழங்கிடும் வகையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய மீன் சந்தைகள் அமைத்திட அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டமானது மாநில அரசு, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதியுதவிடன் ரூ.17.54 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

இத்திட்டத்தின் கீழ், 21 மீன் சந்தைகள் அமைத்திட மாநில அரசின் நிதியுதவியாக ரூ.5.89 கோடி மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியாக ரூ.7.06 கோடி, சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்/ மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை:15

| வ. எண் | **மீன்விற்பனை சந்தை அமைவிடம்** | **திட்ட மதிப்பு (ரூ. இலட்சம்)** |
|---|---|---|
| 1. | சரலூர் (நாகர்கோவில்), கன்னியாகுமரி மாவட்டம் | 81.88 |
| 2. | தாராபுரம், திருப்பூர் மாவட்டம் | 93.00 |
| 3. | வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம் | 48.59 |
| 4. | தோப்புத்துறை, நாகப்பட்டினம் மாவட்டம் | 29.49 |
| 5. | நாகப்பட்டினம் நகரம் | 42.71 |
| 6. | ஆசாத் நகர், நாகப்பட்டினம் மாவட்டம் | 37.78 |
| 7. | குண்டு உப்பலவாடி, கடலூர் மாவட்டம் | 22.50 |
| 8. | தருவைக்குளம், தூத்துக்குடி மாவட்டம் | 13.60 |
| 9. | காசிவிளங்கி, திருச்சி மாவட்டம் | 250.00 |
| 10. | இராமநாதபுரம் | 93.39 |
| 11. | பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் | 100.00 |
| 12. | மேட்டூர், சேலம் மாவட்டம் | 43.00 |
| 13. | டி.வி. எஸ். கார்னர், புதுக்கோட்டை மாவட்டம் | 53.70 |
| 14. | ஆத்தூர், சேலம் மாவட்டம் | 96.30 |

| | | |
|---|---|---|
| 15. | இராணிப்பேட்டை | 61.29 |
| 16. | மார்த்தாண்டம்,<br>கன்னியாகுமரி மாவட்டம் | 97.60 |
| 17. | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் | 100.00 |
| 18. | இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம் | 100.00 |
| 19. | கடையநல்லூர், தென்காசி மாவட்டம் | 38.76 |
| 20. | கருமாண்டிச்செல்லிப்பாளையம்,<br>ஈரோடு மாவட்டம் | 100.00 |
| 21. | அனிச்சம்பாளையம்,<br>விழுப்புரம் மாவட்டம் | 250.00 |
| | **மொத்தம்** | **1,754.00** |

இதனில், 17 மீன் சந்தைகளின் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரம், கடையநல்லூர், அனிச்சம்பாளையம் மற்றும் கருமாண்டிச்செல்லிப்பாளையம் ஆகிய 4 இடங்களில் மீன் சந்தைகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5.16.2 மாநிலத்தில் மீன் நுகரும் முறை

2020-21 ஆம் ஆண்டு மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 7.22 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். மாநிலத்தில் 2020-21 ஆம் ஆண்டு தனிநபர் மீன் நுகர்வு 9.3 கிலோ கிராம் ஆகும். நவீன

மயமாக்கப்பட்ட மீன் சந்தைகள், மீன் கடைகள், நடமாடும் மீன்விற்பனையகங்கள் மற்றும் இணைய வழி விற்பனை மூலம் மாநிலத்தில் மீன் நுகர்வு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

### 5.16.3 மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி

இந்தியாவில் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ரூ.43,717.26 கோடி மதிப்பிலான 11.49 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதியுடன் பெரும்பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலிருந்து 2020–21 ஆம் ஆண்டில் 1.10 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கடல் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச் செலாவணியாக ரூ.5,565.46 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவற்றில் கடல் உணவு பொருட்களான உறைந்த இறால், மீன்கள், கணவாய் மீன், உலர்மீன், குளிரூட்டப்பட்ட மீன் பொருட்கள் மற்றும் உயிர் மீன் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென்கிழக்கு ஆசியநாடுகள், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை இந்திய மீன் பொருட்களுக்கான பெரும் மீன் சந்தைகளாகும்.

தமிழகத்தில் அரசால் கட்டப்பட்டுள்ள 9 பெரிய மீன்பிடி துறைமுகங்கள், 3 நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் 52 மீன் இறங்குதளங்களின் மூலம் மீன் மற்றும் மீன் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்கள் மீன்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதில் மாநிலத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## 5.17 மீனவ இளைஞர்கள் கடற்சார் கல்வி பயில ஊக்குவித்தல்

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட 6 கடற்சார் பாடப்பிரிவுகளை பயின்றிட, மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளில் 151 மீனவ இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.18 அகில இந்திய குடிமைப்பணியில் சேர்வதற்கு மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்**

இத்துறையின் வாயிலாக, 2017ஆம் ஆண்டு முதல், இந்திய குடிமைப்பணி போட்டித் தேர்வுகளை, திறனுடன் எதிர்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு அரசு செலவில் ஆறு மாதகால பிரத்யேக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி (அகில இந்திய குடிமை பணிகளுக்கான பயிற்சி நிலையம், சென்னை) மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை நான்கு அணிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.9.56 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு 75 மீனவ இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.19 மீனவர் மற்றும் மீன்வளர்ப்போருக்கு விவசாய கடன் அட்டை (Kisan Credit Card) வழங்குதல்

மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு தேவைப்படும் நடைமுறை மூலதன செலவினங்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் பெற்றிட விவசாய கடன் அட்டை வழங்கும் திட்டமானது ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டு, தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக மீன்பிடிப்பு, மீன்/ இறால் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, சிப்பி வளர்ப்பு மற்றும் மீன் விற்பனைக்கு தேவைப்படும் நடைமுறை மூலதன செலவினங்களை வங்கிகளிடமிருந்து குறுகிய கால கடனாக பெற்றிட இயலும். இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய மீனவர்/ மீன்வளர்ப்போர்க்கு நடைமுறை மூலதன செலவிற்கு கடன் உச்ச வரம்பாக ரூ.2 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன் தொகைக்கு, ஆண்டொன்றிற்கு செலுத்த வேண்டிய வட்டித்தொகையில் 2 விழுக்காடு குறைக்கப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாக கடனை திரும்ப செலுத்தும் நபருக்கு

வட்டித்தொகையில் ஆண்டுக்கு 3 விழுக்காடு குறைக்கப்பட்டு வட்டி சலுகை அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழகத்திலுள்ள மீனவர்/ மீன்வளர்ப்போருக்கு 3,341 விவசாய கடன் அட்டைகள் ரூ.22.53 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

## 5.20 விரிவாக்கப் பணிகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் செயல்பட்டு வரும் விரிவாக்கப்பிரிவு, அரசின் நலத்திட்டங்களை மீனவர்கள், மீன்வளர்ப்போர் மற்றும் பிற பங்குதாரர்களைச் சென்றடையும் வகையில் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு பொருட்காட்சிகள் மற்றும் வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்று மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மீன்வள மேலாண்மை, கடலில் பாதுகாப்பான மீன்பிடிப்பு முறைகள், மீன்களை சுகாதாரமாக கையாளுதல், மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களின் தூய்மை குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மீனவர் மற்றும்

மீன்வளர்ப்போரின் குறைகளை தீர்க்க, மீனவர் குறைதீர்க்கும் நாள் மற்றும் மீன் வளர்ப்போர்க்கான கூட்டங்கள் இத்துறையால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகிறது. மீன்வளம் தொடர்பான முக்கிய தினங்களான உலக பெருங்கடல் தினம் (ஜீன்–8), தேசிய மீன் வளர்ப்போர் தினம் (ஜீலை–10) மற்றும் உலக மீன்வள தினம் (நவம்பர்–21) கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் மாநிலத்தில் சிறந்து விளங்கும் மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரை ஊக்குவித்திட விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள், விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

### 5.21 தமிழ்நாடு மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொண்டு வருகிறது. இதற்கு முன்பு 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டு கடல் மீனவ மக்கட்தொகை

கணக்கெடுப்பு மேற்கொள்ள அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மீனவர்களின் நலனுக்காக, மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்வதன் மூலம் மீன்வளம் மற்றும் மீனவ மக்களின் தற்போதைய நிலை அறியப்பட்டு, அதன் அடிப்படையில் மீன்வளக் கொள்கைகள் மற்றும் நலத்திட்டங்கள் உருவாக்கப்படும்.

## 5.22 தமிழக மீனவ சமூதாயத்தின் சமூக பொருளாதார நிலை குறித்து ஆய்வு

தமிழக அரசு மீனவ மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மாநிலம் முழுவதும் உருவாக்குவதன் வாயிலாக அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு நலத்திட்டங்களினால் மீனவ மக்களின் சமூக பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ளும் பொருட்டும், கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வுகள் நடத்திட அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திட்டமிடுதல், கொள்கை முடிவு உருவாக்கம், திட்டச் செயல்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கம்

மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை கட்டமைப்பதற்கு இவ்வாய்வு பேருதவியாக அமையும்.

### 5.23 மீனவ கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை

தமிழக மீனவர் மற்றும் மீனவ மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவக் கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்வளத் துறையானது மீனவர்/ மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,431 தொடக்க மீனவர்/ மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்/ 12 மாவட்ட கூட்டுறவு இணையங்கள்/ 1 மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.17 இலட்சம் மீனவர்/ மீனவ மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 53 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 12 பகுதி நேர நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம், கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை: 16**

**மீனவ கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| கூட்டுறவு **சங்கம்** | **சங்கங்களின் எண்ணிக்கை** | **உறுப்பினர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| **தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல்மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 558 | 3,56,992 |
| கடல்மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 461 | 2,60,732 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 300 | 82,986 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 72 | 7,883 |
| இதர வகைச் சங்கங்கள் | 27 | 6,791 |
| **மொத்தம்** | **1,418** | **7,15,384** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 12 | 998 |
| தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 814 |
| **ஆக மொத்தம்** | **1,431** | **7,17,196** |

## 6. தொழில் புரிவதற்கான வழி முறைகளை எளிதாக்குவதன் மூலம் மீன் வளப்பிரிவில் தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகத்தை ஊக்குவித்தல்:

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் நடைமுறையில் உள்ள தேவையற்ற/ வழக்கொழிந்த சட்டங்கள் மற்றும் விதிகளை நீக்கி அல்லது திருத்தம் செய்து, தொழில்முனைவோர் மற்றும் மக்களுக்கு உதவும் வகையில் "எளிதாக வணிகம் செய்தல்" என்ற கருத்தாக்கத்தை செயல்படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதேபோல், நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகளை எளிதில் பின்பற்றும் வண்ணம், இந்த சட்டங்களின் கீழ் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக இணையவழி சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் வழிமுறைகளை எளிமைப்படுத்தும் பணியும் துவங்கியுள்ளது. மீன்வளப் பிரிவில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

### (i) தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டம். 1995:

ஒன்றிய அரசின் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் மூலம் செயல்பாட்டிலுள்ள

சட்டம் (2005), தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டம் 1995–ன் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருப்பதால், தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டம் சட்டம் வழக்கொழிந்து போய்விட்டது. எனவே, இந்த சட்டத்தை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**(ii) மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்புடைய செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலன்) சட்டம், 2007:**

இச்சட்டம், மீனவர்கள், மீன்பிடிப்பு மற்றும் அதனை சார்ந்த தொழிலாளர்களின் விரிவான சமூக பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு மீனவர் நலவாரியம் அமைப்பதற்காக நடைமுறைபடுத்தப்பட்டது. தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களுக்கான வழிகாட்டுதல்கள் இச்சட்டத்தில் உள்ளன. இவ்வாரியத்தால் செயல்படுத்தப்படும் இரண்டு சேவைகளான உறுப்பினர் சேர்க்கை மற்றும் நிவாரணம்/ உதவி தொகை கோரும் விண்ணப்பங்களை பரிசீலனை

செய்தல் ஆகியவை தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட www.tnfwb.tn.gov.in என்ற வலைத்தளம் வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்விரு சேவைகளை இணையவழி சேவை மூலம் செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(iii) தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம், 1983:**

தமிழகத்தில் கடல் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மற்றும் விதிமுறைகள் அமலாக்கம் ஆகியவற்றின் வரையறைகளைக் கொண்ட இச்சட்டம், 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இச்சட்டத்தின் கீழ், தமிழக கடற்பரப்பில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, மீன்பிடி படகுகளின் பதிவு, மீன்பிடி உரிமம், மீன்பிடி உரிமத்தினை புதுப்பித்தல் மற்றும் பதிவு மாற்றம் ஆகிய சேவைகள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் 'ரியல் கிராஃப்ட்' (ReAlCraft) எனும் இணையதளம் வாயிலாக அகில இந்திய அளவில் வழங்கப்படுகிறது.

புதிய மீன்பிடி படகுகள் பதிவு மற்றும் மீன்பிடி உரிமத்தை பதிவு செய்வதை எளிதாக்கும் வகையில், மீனவர்கள் நேரடியாக இந்த இணையதளத்தில் பதிவு

செய்வதற்கான வசதிகளை உருவாக்க தமிழக அரசு ஒன்றிய அரசிற்கு பரிந்துரை செய்யும்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை வாயிலாக மீனவர்களுக்கு வழங்கப்படும் இணைய வழி சேவைகள் விவரம் பின்வருமாறு.

1. மீன்பிடிதடைக்கால நிவாரணத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

2. மீன்பிடிப்பு குறைவு கால நிவாரணத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

3. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

4. தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் நிவாரண உதவி வழங்குதல்.

## 7. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

ஐக்கிய நாடுகள் அமைப்பு 2015–ம் ஆண்டில் வறுமை, சமத்துவமின்மையினை போக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவை சீரமைப்பதற்காகவும் 17 நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030–ஆம் ஆண்டிற்குள் அடைவதற்கான குறிக்கோள்களை வகுத்துள்ளது. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் உற்பத்தியும் உற்பத்திக்கு ஏற்ற நுகர்வு ஒரு அலகாகவும் (இலக்கு 12), ஒரு குறிக்கோள் மற்றும் 'கடல்வளம்' (இலக்கு 14) ஆகிய மூன்று குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய களப்பணி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து தனிப்பிரிவு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தரவுகள் அவ்வப்போது தகவல் இணையத்தில் ஏற்றப்பட்டு வருகின்றன.

இலக்கு–12–ஐ அடைவதற்கு பல்வேறு திட்டங்களின் மூலம் மாநிலத்தின் மீன் உற்பத்தியை அதிகரிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலக்கு–14–ல் கடல்மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு செயற்கை மீன் உறைவிடங்கள்

அமைத்தல், மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல், கடல்வாழ் உயிரின வளர்ப்பு செய்தல், திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்தினை அமல்படுத்துவதன் வாயிலாக நீடித்த நிலையான மீன்பிடிப்பை அடைவதற்கு துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## 8. தமிழ்நாடு மீனவர் நலவாரியம்

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் நலனை பேணவும் மற்றும் வாழ்வாதாரத்தினை மீட்டெடுக்கும் பொருட்டும் மீனவ தொழிலாளர்களுக்கென பிரத்தியேக நலவாரியம் ஒன்றினை அமைத்திடும் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழக அரசு கடந்த 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தினை நிறுவியது.

இவ்வாரியமானது மாண்புமிகு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர்/ இயக்குநரை உறுப்பினர் செயலராகவும், அலுவல் மற்றும் அலுவல்–சாரா உறுப்பினர்களைக் கொண்டு செயல்படும்.

இம்மீனவர் நல வாரியத்தில் மொத்தம் 5.33 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு மீனவர் நலவாரிய விதிகளின்படி நிதியத்திற்கான ஆண்டு பங்களிப்பாக நலவாரிய உறுப்பினர்களிடம் இருந்து முறையே ரூ.20, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமை மீனவர்

கூட்டுறவு இணைத்திற்கு சொந்தமான டீசல் வழங்கு நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் வரி விலக்களிக்கப்பட்ட டீசலில் இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகு உரிமையாளர்களிடமிருந்து லிட்டருக்கு 10 பைசா வீதமும், விசைப்படகு உரிமையாளர்களிடமிருந்து லிட்டருக்கு 20 பைசா வீதமும், நீர்நிலைகளின் மீன்பாசி குத்தகைக் தொகையில் 7 விழுக்காடு வீதமும் மற்றும் மேட்டூர் அணை மீன் விற்பனை கூட்டுறவு சங்கத்தால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனையில் கிலோ ஒன்றிற்கு ரூ.2 வீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 01.04.2008 முதல் 31.03.2022 முடிய ரூ.35.57 கோடி சந்தா தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியம் இவ்வாண்டு (2021–22) அதிகபட்சமாக ரூ.7.78 கோடி நிதியம் வசூலித்துள்ளது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் பின்வருமாறு:

## அட்டவணை : 17

## தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

| வ. எண் | நிவாரணம் / உதவி | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கி படிப்பவர்கள் | |
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | 1,250 | 1,500 |
| | ஆ)பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | 1,750 | 2,000 |
| | இ)தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்ப பயிற்சி (Polytechnic) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | ஈ) இளங்கலை பட்டப்படிப்பு | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | உ) முதுகலை பட்டப்படிப்பு | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | ஊ) தொழிற் கல்வி, இளங்கலை கல்வி. (மீன்வளம், வேளாண்மை, கால்நடை, சட்டம், பொறியியல், மருத்துவம்) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |

| வ. எண் | நிவாரணம் / உதவி | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| | எ) முதுகலை தொழிற் கல்விகள் | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 2. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி<br>ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமண உதவி | | | 3,000<br>3,000 | 5,000<br>5,000 |
| 3. | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை | | | | |
| | i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் ஆறு மாதங்கள்) | | | 6,000 | |
| | ii) கருச்சிதைவு | | | 3,000 | |
| | iii)மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு | | | 3,000 | |
| 4. | விபத்து நிவாரணம் | | | | |
| (அ) | விபத்தினால் மரணம் | | | 2,00,000 | |
| (ஆ) | இரண்டு கைகள் இழப்பு | | | 1,00,000 | |
| (இ) | இரண்டு கால்கள் இழப்பு | | | 1,00,000 | |
| (ஈ) | ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | | | 1,00,000 | |
| (உ) | இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | | | 1,00,000 | |
| (ஊ) | ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | | | 1,00,000 | |
| (எ) | மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | | | 50,000 | |
| 5. | விபத்தின் காரணமாக அல்லாமல் | 2,00,000 | | | |

| வ. எண் | நிவாரணம் / உதவி | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| | மீன்பிடிக்கையில் அல்லது அதற்குப் பின் மரணம் | |
| 6. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 2,00,000 |
| 7. | இயற்கை மரணம் | 15,000 |
| 8. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

## 8.1. தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நிவாரணம்/ உதவி தொகை துரிதமாக வழங்குதல்

- தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் கீழ் பயன்பெறும் மீனவ பயனாளிகளுக்கான நிவாரணம்/ உதவி தொகையினை துரிதமாக வழங்கிடும் பொருட்டு www.tnfwb.tn.gov.in என்ற வலைத்தளம் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

- இவ்வலைதளத்தை பயன்படுத்த அனைத்து மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

உதவி இயக்குநர்களுக்கும் பிரத்தியேக பயனாளர் குறியீடு (User ID) வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நலவாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் நிவாரணம்/ உதவிகோரும் விண்ணப்பங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் பரிசீலனை செய்யப்பட்டு தமிழ்நாடு மீனவர் நலவாரிய தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பங்கள் நேரடியாக வலைதளத்தில் பரிந்துரை செய்யப்படுகின்றது.

- இப்புதிய நடைமுறையினால், காலவிரையமின்றி நிவாரணம் கோரும் விண்ணப்பங்கள் துரிதமாக பரிசீலிக்கப்படுவதுடன், மின்னணு பணப்பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு மீனவர் நலவாரியம் 2021–22 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க சாதனையாக 3,511 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு ரூ.5.64 கோடி நிவாரண உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது.

- மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தில் பி.எப்.எஸ்.சி/ பி.இ, (Fisheries Engineering) பாடப்பிரிவுகளை பயில்வதற்கு ஏதுவாக, அப்பாடப்பிரிவுகளில் பயில 5 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு நலவாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் வாயிலாக கல்விக்கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2020−21 ஆம் ஆண்டிற்கு ரூ.4.27 இலட்சம் கல்விக் கட்டணமாக தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் ஏற்கப்பட்டுள்ளது. இவ்வுதவி திட்டம் இவ்வாண்டும் செயல்படுத்தப்படும்.

## 9. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையமானது (வரையறுக்கப்பட்டது) 834 தொடக்க மீன்வள கூட்டுறவு சங்கங்ளை உள்ளடக்கியது. இந்நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983ன் கீழ்பதிவு செய்யப்பட்டு, கடந்த 19.10.1992 லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இணையத்தில் 474 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 152 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 198 மீனவமகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91. 28 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

இணையத்தின் செயற்பதிவாளராக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்களும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர் அளவில் மேலண்மை இயக்குநரும் இணையத்தை நிர்வகித்து வருகின்றனர். இணையத்தின் நிர்வாகக்குழு, தலைவர் மற்றும் 24 குழு உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகள்:**

**9.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்**

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப் படகுகளுக்கு, 2020-21 ஆம் நிதியாண்டில், 13 விற்பனை மையங்கள் மூலம் 6,589 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு. இதன்மூலம் ரூ.131.78 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 9.2 மீன்பிடி கலன்களுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 16 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 2021 – 22 ஆம் ஆண்டில், 23,519 கிலோலிட்டர் வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப்படகுகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.470.38 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2022–23 ஆம் நிதியாண்டில் புதிதாக அமைக்கப்படும் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி இறங்குதளங்களில் இணையத்தின் மூலம் புதிய டீசல் விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 9.3 மீனவ மளிருக்கு கருவாடு விற்பனை செய்ய உபகரணங்கள் வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 100 மீனவ மகளிர் பயனாளி கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்கு கருவாடு தயாரிக்க தேவையான, மீன்களை சுகாதாரமான முறையில் உலர்த்த மற்றும் கருவாடு வியாபாரம் செய்வதற்குத் தேவையான அன்னக்கூடை, எடைபோடும் கருவி,

குடை மற்றும் நாரினால் ஆன பாய் ஆகியவை 2021−22 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 60% மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

## 9.4 நவீன மீன் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் பொதுமக்களுக்கு தரமான மீன்களை, நியாயமான விலையில் வழங்கிடும் பொருட்டு, செங்கல்பட்டு மாவட்டம் வாணியஞ்சாவடி, காஞ்சிபுரம் மாவட்டம் வையாவூர், கடலூர் மாவட்டம் நெய்வேலி நகரம், அரியலூர், மதுரை மாவட்டம் பழங்காநத்தம், இராமநாதபுரம், பரமக்குடி, திருநெல்வேலி மாவட்டம் வண்ணாரப்பேட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 2021−22 ஆம் ஆண்டில் ரூ.9.34 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 9.5 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை

ஏற்படுத்திட தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு (2017−2022) ரூ.887.43 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம், தூத்துக்குடி, குளச்சல், தேங்காப்பட்டிணம் மீன்பிடி துறைமுகங்களிலும் தருவைக்குளம் மீன்பிடி இறங்குதளத்திலும் பனிக்கட்டி நிலையங்கள் அமைக்கவும், டீசல், மண்ணெண்ணெய் வாங்க சுழற்சி நிதியாகவும், தொடக்க மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு சிறு வணிகக் கடன் வழங்கவும் ரூ.729.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தின் கீழ், 2021−22 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்திற்கு ரூ.1 கோடி வழங்கியுள்ளது.

## 9.6 மீனவ மகளிருக்கு சிறு கடன் வழங்கும் திட்டம்

தற்போது மீனவர்கள், குறிப்பாக மீனவ மகளிர், மீன் கொள்முதல் செய்பவர் மற்றும் தனி நபர்கள் மூலம் அதிக வட்டிக்கு கடன் பெற்று மீன் விற்பனை சார்ந்த தொழிலில் ஈடுபட்டு, குறைவான வருவாயை

பெறுகின்றனர். மீனவ மகளிருக்கு உதவிடும் வகையில் இவ்விணையம் குறைந்த வட்டி விகிதத்தில் சிறு கடன் வழங்கி, அதன் வாயிலாக அவர்கள் விற்பனை செய்யும் மீன்களுக்கு கூடுதல் விலை கிடைக்க வழிவகை செய்துள்ளது. இதற்காக 2021–22 ஆம் ஆண்டில் மீனவ மகளிர் பயனாளி ஒருவருக்கு தலா ரூ.15,000 வீதம், 180 மீனவ மகளிர் அடங்கிய 36 கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்கு மொத்தம் ரூ.27 இலட்சம் சிறு கடன் வழங்கப்பட்டுள்ளது. 2022–23 ஆம் நிதியாண்டில் 50 மீனவ மகளிர் கூட்டுபொறுப்பு குழுக்களுக்கு ரூ.37.50 இலட்சம் சிறு கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 9.7 மீன்பிடித்துறைமுகம்/ மீன்இறங்குதளம் ஆகியவற்றில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையமானது, நாகப்பட்டினம், தூத்துக்குடி, சின்னமுட்டம், குளச்சல், தேங்காப்பட்டிணம் மீன்பிடித் துறைமுகங்களிலும் மற்றும் தருவைக்குளம் மீன்பிடி இறங்குதளத்திலும் கூட்டுறவு பண்டகசாலை அமைத்து மீன்பிடிக்கத் தேவையான பொருட்கள் மற்றும் மீனவர்களுக்கு தேவையான இதர அத்தியாவசியப்

பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. 2021–22 ஆம், ஆண்டில் இதன் மூலம் ரூ.7.12 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 9.8 நிதி நிலை

இவ் இணையம், 2021–22 ஆம் நிதி ஆண்டில் ரூ.186.95 கோடி வரவு செலவினம் செய்து, ரூ.3.81 கோடி (தணிக்கை செய்யப்படாதது) நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

## 10. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது, பொதுத்துறை நிறுவனமாக மாநிலத்தின் வணிக ரீதியிலான மீன்வளப் பணிகளை மேற்கொள்வதற்கு அமைக்கப்பட்டது. இக்கழகம் நிறுவனங்களின் சட்டத்தின்கீழ், ரூ.5 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் 1974 ஆம் ஆண்டு தமிழக அரசால் பதிவு செய்யப்பட்டு, அரசால் நியமிக்கப்படும் இயக்குநர் குழுமத்தினால் நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் தலைவரை அரசு, 28.10.2021 அன்று நியமித்துள்ளது. இக்கழகத்தின் அலுவல் சாரா மேலாண்மை இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை ஆணையர்/ இயக்குநர் ஆவார். இக்கழகத்தின் களப்பணிகள் பொதுமேலாளர், முதுநிலை மேலாளர்கள், மேலாளர்கள், துணை மேலாளர்கள், உதவி மேலாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் ஆகியோருடன் மொத்தம் 95 நிரந்தர பணியாளர்கள் 11 தொகுப்பூதிய பணியாளர்கள் மற்றும் 320 தனியார் சேவை மையப்பணியாளர்கள் ஆகியோரால் நிர்வகிக்கப்படுகிறது. இக்கழகம் தனது

வணிக ரீதியிலான பணிகளை விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

## 10.1 நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 8 நீர்த்தேக்கங்களில் வளர்ந்த மீன் விரலிகளை இருப்புச் செய்து, ஆண்டு தோறும் சுமார் 860 மெட்ரிக் டன் உள்நாட்டு மீன்களை உற்பத்தி செய்கிறது. மேலும், அதிகளவு வருமானம் ஈட்டிடும் பொருட்டு அரசின் ஆணைகளின்படி இந்நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமையினை தனியாருக்கு குத்தகைக்கு அளித்துள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியார், திருப்பூர் மாவட்டம் அமராவதி, திருமூர்த்தி மற்றும் திண்டுக்கல் மாவட்டம் பாலாறு–பொருந்தலாறு ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் 3.83 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஐந்து மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளை கொண்டுள்ளது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் தரம்வாய்ந்த மீன்குஞ்சுகள், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள

நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், தனியார் மீன் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது, ஆழியார் மீன் பண்ணையில் வண்ணமீன் உற்பத்தி மையத்தினை அமைத்துள்ளது. ஆழியார், திருமூர்த்தி மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்க பகுதிகளில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் "வண்ணமீன் காட்சியகங்கள்" அமைத்து நிர்வகித்து வருகிறது.

## 10.2 மீன் விற்பனை

தரமான மீன்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட கடல்மீன் உணவுப் பொருட்களை நியாயமான விலையில் கழகத்தின் சில்லரை மீன் விற்பனை நிலையங்கள் மூலம் சென்னை, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும், நடமாடும் மீன்விற்பனை நிலையங்கள் மூலம் சென்னை, திருவண்ணாமலை, கடலூர், கோயம்புத்தூர், மதுரை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் பொதுமக்களுக்கு விற்பனை செய்துவருகிறது. மீன் விற்பனையினை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, பல்வேறு நகரங்களில் அதிக

எண்ணிக்கையிலான நவீன மற்றும் நடமாடும் சில்லறை மீன்விற்பனை நிலையங்களை அமைத்து. மீன்விற்பனையினை விரிவுபடுத்திட கழகம் முயற்சிகளை எடுத்து வருகிறது. மேலும், மொத்த மீன் விற்பனை அங்காடி ஒன்று கோயம்புத்தூரில் உக்கடம் பகுதியில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

## 10.3 இணையதளம் மூலம் மீன் விற்பனை வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தினுடைய தயாரிப்புகளை வணிக அடையாளப்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது, www.meengal.com என்ற வணிக இணையதளத்தை கூடுதல் வசதிகளுடன் புதுப்பித்துள்ளதுடன், கைபேசி பயன்படுத்துவோருக்கு 'Meengal' எனும் கைபேசி செயலியினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தகைய மின்னனு வணிக தரவுகளின் மூலம் கோவிட்–19 பெருந்தொற்று ஊரடங்கு காலகட்டத்தில் மீன்களை நுகர்வோர்களின் இல்லங்களுக்கே கொண்டு சேர்க்கப்பட்டது. இது வரை 31,240 எண்ணிக்கையிலான விநியோகம்

நிறைவேற்றப்பட்டு, 47.43 மெட்ரிக் டன் மீன்கள் ரூ.2.54 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது, அதனுடைய செயல்பாடுகளை பொதுமக்களிடையே பிரபலபடுத்திடும் நோக்கில், *"இது நம்ம ஊரு மீன்கள்"* என்ற வாசகத்துடன் கூடிய புதிய வணிக அடையாள சின்னத்தினை அறிமுகப்படுத்தி, சமூக ஊடகங்கள் மூலம் பிரபலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 10.4 வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் மற்றும் மானிய விலை தொழிலக மண்ணெண்ணெயினை மீன்பிடி படகுகளுக்கு வழங்குதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மாநிலத்தின் கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் 31 டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலம் மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டு படகுகளுக்கும், 10 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலம் இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கும் விநியோகித்து வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு புதிய டீசல்

விற்பனை நிலையங்கள் மூக்கையூர் மற்றும் குந்துகல்லில் அமைக்கப்பட்டுவருகின்றன. புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் கூடுதலாக டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10.5 சேத்துப்பட்டு, பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்கா மேலாண்மை

சென்னை, சேத்துப்பட்டிலுள்ள பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்காவின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை இக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

இப்பூங்காவில் பின்வரும் வசதிகளான, மீன்காட்சியகம் மற்றும் நீர் வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம், படகுக்குழாம், தூண்டில் மீன்பிடிப்பு சிறுவர் பூங்கா, உணவகம், சிறு ஓட்டம்/ நடைபயிற்சிப் பாதைகள், சிறுவர் விளையாட்டுப்பகுதி, முப்பரிமாணத் திரையரங்கு, விருந்தினர் மாளிகை, மற்றும் பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவற்றை கொண்டுள்ளது. மேற்படி வசதிகள் அதிகளவிலான

குழந்தைகள் மற்றும் பொதுமக்களை பசுமை பூங்காவிற்கு ஈர்க்கின்றது.

பசுமைப் பூங்காவிலுள்ள பல்வேறு பொழுது போக்கு அம்சங்கள் தனியாருக்கு குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் கிடைக்கப் பெறும் வருவாய் பூங்காவின் பராமரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பசுமைப்பூங்காவில் கூடுதல் பொழுது போக்கு வசதிகளை அறிமுகப்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 10.6 மதிப்புக்கூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் பயிற்சி நிலையம், இராயபுரம்

மீனவ மகளிர் மற்றும் மகளிர் சுய உதவி குழுவினருக்கு மதிப்புக்கூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பதற்கு பயிற்சிகள் அளித்திடும் வகையில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது பயிற்சி நிலையத்துடன் கூடிய மையசமையற் கூடம் ஒன்றினை இராயபுரத்தில் அமைத்துள்ளது. இப்பயிற்சி நிலையம் மூலம், 2021 –2022 ஆம் ஆண்டில், 120 மீனவர் நலவாரியம் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்கள்

தயாரிப்பதற்கான பயிற்சிகள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 10.7 மீன்தீவனம் தயாரிக்கும் ஆலையினை இயக்குதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தஞ்சாவூர் மாவட்டம் அச்சம்பட்டியில் நிறுவப்பட்டுள்ள மீன்தீவனத் தயாரிப்பு ஆலையினை நடத்திவருகிறது. இவ்வாலையின் மூலம் 491.30 மெட்ரிக் டன் மீன் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு மீன்பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

### 10.8 நிதி நிலை

2021–22 ஆம் நிதியாண்டில் ரூ.702.63 கோடி விற்று முதலில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது ரூ.10.07 (தணிக்கை செய்யப்படாதது) கோடி இலாபம் ஈட்டியுள்ளது. 2022 –23 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் ரூ.769.49 கோடி விற்று முதலில் ரூ.12.00 கோடி இலாபம் ஈட்டிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 10.9 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தினுடைய நிதிப் பங்களிப்பு

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், ரூ.3.05 கோடியினை மாநில அரசுக்கு பங்கு

ஈவுத்தொகையாக 2021–22 ஆம் ஆண்டில் செலுத்தியுள்ளது. மேலும், ரூ.2.07 கோடியினை தனது பங்களிப்புத் தொகையாக 2021–22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு வழங்கியுள்ளது.

மேலும், 2020–21 ஆண்டிற்கு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது தன்னுடைய பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து ரூ.23.40 இலட்சத்தினை மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு செலுத்தியுள்ளதுடன், 2021–22 ஆண்டிற்கு தூத்துக்குடி மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு ரூ.25 இலட்சத்தினை தனது பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

## 11. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகம் (TNJFU)

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது மாநில அரசால் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம், 2012–ன் படி, 19.06.2012 அன்று நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டது. மீன்வளத்தில் தொழிற்கல்வியை வழங்கி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளின் வாயிலாக மாநிலத்தின் மீன் உற்பத்தியை அதிகரிப்பதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.

### 11.1 தொலைநோக்கு

"மக்களுக்கு உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதில் மீன்வள அறிவியலை சரியாகப் பயன்படுத்துதல்".

### 11.2 நிருவாக அமைப்பு

இப்பல்கலைக்கழக தலைமையகத்தில் துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குனர், விரிவாக்கத் துறை இயக்குனர், தேர்வு கட்டுப்பாட்டாளர், வளங்குன்றா மீன் வளர்ப்பு இயக்குனர், நிதி அலுவலர் மற்றும் உடமை அலுவலர் ஆகியோரின் அலுவலகங்கள் செயல்பட்டு

வருகின்றன. 115 ஆசிரியர்கள் மற்றும் சுமார் 250 நிருவாக பணியாளர்களைக் கொண்ட இப்பல்கலைக்கழகம் நாட்டின் பெரிய மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகும்.

## 11.3 கல்வி

பல்கலைக்கழகத்தின் உறுப்பு நிறுவனங்கள் பதிமூன்று மாவட்டங்களில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் 8 கல்லூரிகள், 5 இயக்ககங்கள் மற்றும் 3 இணை தொழில்சார் கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. மீன்வள அறிவியல், மீன்வளப் பொறியியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல், ஊட்டச்சத்து மற்றும் உணவு தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் மீன்வள வணிகம் ஆகியவற்றில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மீன்வள அறிவியலில் 13 பாடங்களிலும், உயிரின அறிவியலில் ஒரு பாடத்திலும் முனைவர் படிப்புகள் வழங்கப்படுகின்றது. மேற்கூறியவற்றுடன் மீன்வளர்ப்பு, மீன் பதனப்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் மீன்பிடி தொழில்நுட்பம் ஆகியவற்றில் தொழில்சார்ந்த பட்டப்படிப்புகளும் வழங்கப்படுகின்றது. 2021–22ம்

ஆண்டில், இளங்கலைப் பட்டப்படிப்பு பாடங்களில் 371 மாணவர்களும், முதுநிலை பட்டப்படிப்புகளில் 73 மாணவர்களும் சேர்த்துள்ளனர். இப்பல்கலைக்கழகத்தின் தற்போதைய மாணவர்களின் எண்ணிக்கை 1,435 ஆகும்.

இப்பல்கலைக்கழகத்தின் மாணவர் சேர்க்கை விகிதம் நாட்டில் உள்ள மற்ற மீன்வளப் பல்கலைக்கழகங்கள் மற்றும் மீன்வளக் கல்லூரிகளுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாக உள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தினால் நடத்தப்பட்ட முதுகலைப் பட்டப்படிப்பிற்கான சேர்க்கையில், அகில இந்திய நுழைவுத்தேர்வில் இப்பல்கலைக்கழக மாணவர்கள் முறையே 5–வது மற்றும் 10–வது இடங்களை பெற்றுள்ளனர். மொத்தம் 38 மாணவ/ மாணவியர், அகில இந்திய நுழைவுத்தேர்வின் மூலம் தேர்ச்சி பெற்று முதுகலைப் பட்டப்படிப்பில் சேர்ந்துள்ளனர். கல்வியில் முதன்மை பெற்ற மாணவர்களை அங்கீகரிக்கும் பொருட்டு 50 விருதுகள் ஒவ்வொரு வருடமும் இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் அரசாணைப்படி, 2021–22ம் கல்வி ஆண்டில் மாணவர்களுக்கான இளங்கலை

பட்டப்படிப்பில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி சேர்க்கை நடைபெற்றது. மேலும், மற்றொரு அரசாணை மூலம் மீனவ சமுதாய மாணவர்களின் சேர்க்கை 5 லிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டதன் மூலம் 2021−22ம் ஆண்டில் 18 மீனவ சமுதாய மாணவர்கள் இளங்கலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

## 11.4 ஆராய்ச்சி மற்றும் திட்டங்கள்

இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டு ஆய்வு கட்டுரைகளை ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளனர். 2021−22ம் ஆண்டில் 88 ஆய்வுக் கட்டுரைகள் தேசிய வேளாண் அறிவியல் அகாடமி (NAAS) மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆறு மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இப்பல்கலைக்கழகம் இரண்டு காப்புரிமைகளை பெற்றுள்ளது. 2021−22ம் ஆண்டில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.67 கோடி நிதியுதவி பெற்றுள்ளது.

## அட்டவணை : 18

| எண் | நிதி நிறுவனம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை – அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம், புது தில்லி | 2 | 81.52 |
| 2 | தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், ஐதராபாத் | 1 | 104.68 |
| 3 | தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், ஐதராபாத் | 1 | 277.60 |
| 4 | தமிழக அரசின் மாநில புதுமைத் திட்டம் | 1 | 430.66 |
| 5 | தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் | 14 | 2692.31 |
| 6 | தமிழக அரசின் ஒருங்கிணைந்த வேளாண் நவீனமயமாக்கல் திட்டம் | 1 | 250.00 |
| 7 | மாநில நிதி | 2 | 649.00 |
| 8 | இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | 1 | 250.00 |

| எண் | நிதி நிறுவனம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|
| 9 | விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி | 3 | 1865.00 |
| 10 | பருவநிலைக்கேற்ப விவசாயத்தில் தேசிய புதுமைத் திட்டம் | 2 | 68.25 |
| 11 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை – அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம், புது தில்லி | 1 | 31.11 |

2021–22ம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் தேசிய அளவிலான நிறுவனங்கள், தனியார் தொழில் முனைவோர் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மூலம் 4 புதிய தொழில்நுட்ப தொகுப்புகள், 4 புதிய தயாரிப்புகள், 5 மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் ஒரு கைபேசி செயலியை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

## 11.5 விரிவாக்க செயல்பாடுகள்

விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் 7 மீன்வளர்ப்பு தர சோதனை ஆய்வகங்கள், 3 நடமாடும் நோய் கண்டறியும் ஆய்வகங்கள், 4 மூலக்கூறு கண்டறியும் ஆய்வகங்கள், 3 உணவுப் பொருட்கள் தர சோதனை ஆய்வகங்கள் மற்றும் ஒரு தீவன தர பரிசோதனை ஆய்வகம் ஆகியவை குறைந்த கட்டணத்தில் பல்வேறு தர பரிசோதனைகளை செய்து வருகின்றன. இப்பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஆய்வக சோதனை செலவில் 30 விழுக்காடு சலுகை தரப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 2019ம் ஆண்டு முதல் இயங்கி வரும் "கடல் சார் தயாரிப்புகள் வணிக காப்பக மன்றம்" தொழில் முனைவோர் வணிக மேம்பாட்டை ஊக்குவித்து வருகிறது. இளம் மற்றும் ஆரம்ப நிலை தொழில் முனைவோர்களை, மீன் மற்றும் கடல்பாசி மதிப்பூட்டிய பொருட்களை உருவாக்கி ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டத்தின் வாயிலாக இடம், பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வணிக காப்பக

வசதிகளை பயன்படுத்த இதுவரை 23 தொழில் முனைவோர்கள் பதிவு செய்துள்ளனர். மேலும் இதில் ஒரு வணிக நிறுவனம் வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கலில் உள்ள வேளாண் அறிவியல் மையம் (KVK) தொழில்நுட்ப மதிப்பீடு, மேம்படுத்துதல் மற்றும் செயல் விளக்கம் ஆகியவற்றின் மூலம் மாவட்ட அளவில் இடம் சார் (location specific) தொழில்நுட்பங்களை உருவாக்கி உரிய தகவல்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கிறது. இதன் மூலம் விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழில்களுக்கு தகவல் மற்றும் வள மையமாக வேளாண் அறிவியல் மையம் செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு, நன்னீர் மீன்வளர்ப்பு, வண்ண மீன்வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன் மற்றும் செடி வளர்ப்பு, நெல் மற்றும் தீவன உற்பத்தி, தேனீ வளர்ப்பு, தென்னை மற்றும் மர நாற்று உற்பத்தி, காளான் வளர்ப்பு, பஞ்சகாவ்யா உற்பத்தி, மண்புழு உரம், தென்னை நார் உரம், கோழி, காடை, கறவைமாடு மற்றும் ஆடு வளர்ப்பு, மீன் மற்றும் இறால் ஊறுகாய் தயாரிப்பு

ஆகியவற்றில் செய்முறை விளக்க பண்ணைகளைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

தேசிய மற்றும் சர்வதேச அளவில் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், மீன் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் 5 பட்டறைகள், 1 அறிவியல் மாநாடு, 48 இணையவழி கருத்தரங்கங்கள் மற்றும் 341 பயிற்சிகள் இணையவழி மூலமும், நேரடியாகவும் நடத்தப்பட்டது.

## 11.6 புதுமையான முயற்சிகள்

இணைய வழி வளாகம், தூய்மை வளாகம் மற்றும் பசுமை வளாகம் ஆகியவற்றை முன்னிருத்தி இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது.

- கல்வி படிப்புகளில் மாணவர் விண்ணப்பம் மற்றும் சேர்க்கை, இணைய வழி முறை வாயிலாக செயல்படுத்தப்பட்டுள்ளது. தொற்று நோய் காலத்தில் மாணவர்கள் இணைய வழியில் தேர்வெழுத அனுமதிக்கப்பட்டனர். இதன் மூலம் நேரம் மற்றும் செலவு குறைவு ஏற்பட்டதால், இனிவரும் காலங்களிலும் இணைய வழியிலேயே மாணவர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்பட உள்ளனர்.

- தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் அமைக்கப்பட்டு ஒற்றைச் சாளர முறை மூலம் பயனாளிகளுக்கான தகவல்கள் பரிமாறப்படும்.

- மீன்வளப் பல்கலைக்கழக தலைமையகக் கட்டிடம் இப்போது 80 KVA சூரிய சக்தியை உற்பத்தி செய்வதன் மூலம் கிடைக்கும் மின்சாரத்தில் இயங்கி வருகிறது. நாகப்பட்டினம் மீன்வளப் பொறியியல் கல்லூரி மற்றும் பவானிசாகர் வளங்குன்றா நீர்வாழ் மீன்வளர்ப்பு மையம் சூரிய சக்தி மின்சாரத்தில் இயங்கி வருகிறது.

- புதியதாக கட்டப்பட்ட பல்கலைக்கழக நூலகக் கட்டிடம், பகல் நேரத்தில் இயற்கையான வெளிச்சத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பசுமைக் கட்டிடம் ஆகும்.

- எல்லாப் பல்கலைக்கழக வளாகங்களிலும் பசுமை வளாகம் உருவாக்கும் நோக்கில் NSS மற்றும் இதர ஆர்வலர்கள் மூலம் கழிவுகள் அதன் தன்மைக்கேற்ப பிரிக்கப்பட்டு, அகற்றப்பட்டு, மேலும் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகிறது.

## 11.7 இலக்குகள் மற்றும் அதனை அடையும் வழி முறைகள்

இப்பல்கலைக்கழகமானது உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பின்வரும் மூன்று இலக்குகள் மற்றும் அதனை அடையும் வழிமுறைகளை நிர்ணயித்துள்ளது.

1. கல்வியில் சிறப்புத்தன்மை
2. ஆராய்ச்சியில் தனித்தன்மை
3. எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

- இளைஞர்களை மீன்வளர்ப்பு மற்றும் மீன்வளம் சார்ந்த வணிகத்தில் தொழில் முனைவோர்களாகவும், ஆலோசகர்களாகவும் உருவாக்கும் வகையில், மாணவர்களிடம் இணையவழி கற்றல், பேச்சாற்றல் மற்றும் தொழில் திறன்களை ஊக்குவித்தல்.
- வழக்கமான கற்றல் முறைகளிலிருந்து திறன் அடிப்படையிலான கற்பித்தலை மாணவர்களுக்கு வழங்குதல். இதன் மூலம் திறன் சார்ந்த கல்வியை அளிப்பதோடு, அவர்களை குறிப்பிட்ட

துறையில் செயல்திறன் மிக்கவர்களாக உருவாக்குதல்.

- பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு உறுப்பு கல்லூரிகளில் உருவாக்கப்பட்டுள்ள உள்தர அளவீடு அமைப்பு (IQAC) மூலம் கல்வி மேம்பாட்டில் அக்கறை உள்ளவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன் மற்றும் கல்வியை மேம்படுத்துதல்.
- ஆழ்கடல் மீன்பிடிப்பு, கடலில் கூண்டு அமைத்து மீன் வளர்த்தல், ஊட்டச்சத்து மிக்க மீன் உணவுப் பொருட்கள் தயாரிப்பு, சுற்றுச்சூழலை பாதுகாத்தல், புதிய மீன் இனங்களை இனங்காணுதல் மற்றும் வளர்த்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன்வளர்ப்பு போன்ற துறைகளில் புதுமையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏதுவாக ஆராய்ச்சிக் கட்டமைப்பை உருவாக்குதல்.
- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து கூண்டுகளில் மீன்வளர்ப்பு, மறுசுழற்சி முறை மீன் வளர்ப்பு மற்றும் அக்வாபோனிக்ஸ்

போன்றவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சுற்றுப்புற சூழல் பாதிக்காத, சாத்தியமான உள்நாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.

- தொழில் துவங்க தயக்கம் காட்டுபவர்களுக்கு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பில் செயல்முறை அறிவினையும், தொழில் திறனையும் அளித்து ஊக்குவிக்க, தொழில் காப்பகங்கள் அமைத்தல்.
- மாநிலத்தில் தனிநபர் மீன் நுகர்வு அளவினை அதிகரிக்கும் நோக்கில், நுகர்வோர் விரும்பும் வகையில் மீன் பொருட்கள் உருவாக்கப்பட்டு புதுமையான பரப்புரைகள் மேற்கொள்ளுதல்.

## 11.8 நிலையான வளர்ச்சி இலக்குகள்

- வயது வரம்பின்றி அனைவரும் மீன்வளர்ப்பில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில், கல்வி பாடத்திட்டங்கள் மற்றும் பயிற்சிகளை அறிமுகப்படுத்தி மீன்வளம் சார்ந்த கற்றலையும், திறனையும் வழங்குதல்.
- பண்ணைக் கழிவுகளை குறைக்கும் நோக்கில், பல் அடுக்கு உணவுசார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, உயிர்கூழ்ம உற்பத்தி தொழில்நுட்பம், மறுசுழற்சி முறை மீன்வளர்ப்பு

மற்றும் அக்வாபோனிக்ஸ் போன்றவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

- "கழிவுகளிலிருந்து செல்வம்" என்ற கருத்தின் அடிப்படையில் கடல் உணவு தொழிற்சாலை கழிவுகளை, பெப்டைடுகள், கொல்லாஜன், நுண்ஊட்டச்சத்து மருந்துகள் மற்றும் தீவன உபபொருட்களாக மாற்றுதல்.

## 12. இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள்

மீன்வளப்பிரிவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான அரசின் எதிர்காலத் திட்டங்கள்:

- மீனவர்களின் நலனை உறுதி செய்திடும் வகையில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.
- கடலில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், நவீன தகவல் தொடர்பு அமைப்பினை ஏற்படுத்தி தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்கப்படும்.
- அதிகளவில் காணப்படும் ஆழ்கடல் மீன்வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்திட ஏதுவாக, சுற்றுச்சூழலுக்குகந்த மீன்பிடி நடைமுறைகள் மானியத் திட்டங்கள் மூலம் ஊக்குவிக்கப்படும்.
- கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற மாற்று வாழ்வாதார திட்டங்கள் ஊக்குவிக்கப்படுவதுடன், அவற்றிற்கு தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும்.

- மத்திய ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தொழில்நுட்ப உதவியுடன், நண்டு வளர்த்தல், கடல் மீன்களை குளங்களில் வளர்த்தல் மற்றும் கடல் கூண்டுகளில் சிங்கி இறால் வளர்த்தல் போன்ற கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படும்.

- விவசாயத்திற்கு பயன்படாத கடற்கரையோர தரிசு நிலங்களை முறையாக பயன்படுத்தி, கடலோர மீன் வளர்ப்பின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க நிலங்களை குத்தகைக்கு விடுவதற்கான கொள்கைகள் உருவாக்கப்படும்.

- மீன்களை சுகாதாரமாக கையாளுதல், தரத்தினை பேணுதல் மற்றும் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு அதிக விலையினை பெறுதல் போன்றவற்றை உறுதி செய்வதற்காக, உலகத் தரம் வாய்ந்த மீன்பிடித் துறைமுகங்கள், கடற்கரை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொடர் குளிர்காப்பு வசதிகள் தமிழகத்தின் கடற்கரை முழுவதும் ஏற்படுத்தப்படும்.

- சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை திறம்பட அமல்படுத்துவதன் மூலம் மீன்வளங்களை பாதுகாத்து நிலைத்த மேலாண்மை செய்யப்படும்.

- மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதில் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. இதற்காக மீன்குஞ்சு உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் மற்றும் மீன் வளர்ப்பிற்கு அனைத்து நீர் ஆதாரங்களையும் திறம்படப் பயன்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

- வளர்க்கப்பட்ட உள்நாட்டு மீன்களுக்கு நல்ல விலையை பெற்றிட குழு (Cluster) அடிப்படையிலான மீன்வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டு, சீரிய முறையில் சந்தைப்படுத்தப்படும்.

- பொது சுகாதார அணுகுமுறை (One Health Approach). இந்த அணுகுமுறையானது, மக்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியன

உகந்த ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு உள்நாட்டிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் செயல்படும் பல துறைகளின் கூட்டு முயற்சியாகும். இந்த அணுகுமுறையானது அதிக சத்தத்தால் ஏற்படும் காது கேளாமை, தோல் அழற்சி, தசை–எலும்பு நோய்கள் போன்ற தொழில் சார்ந்த நோய்களை கட்டுப்படுத்த உதவும்.

- பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருத்துவ இயக்குநரகம் மற்றும் மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இயக்குநரகத்தின் அமைப்புசாரா தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான மாநில செயல்பாட்டு மையம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, இந்த சுகாதார அணுகுமுறையை கருத்துப்பட்டறைகள், கருத்தரங்குகள், மருத்துவக் கல்வியை தொடர்தல் மற்றும் பிற திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலம் வலுப்படுத்துதல்.

## 13. நிதி ஒதுக்கீடு (2022-23)

2022-2023 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ.1,158.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.551.92 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.606.30 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

## 14. நிறைவுரை

மீனவர்களின் நலனை உறுதி செய்வது, மீன் உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் கடல் உணவு ஏற்றுமதியை அதிகரிப்பதும் அரசின் மீன்வளம் சார்ந்த கொள்கையாகும். பாரம்பரிய கடல் பகுதியில் நமது மீனவர்களின் மீன்பிடி உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது. மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான உதவித்தொகை ரூ.5,000-லிருந்து ரூ.6,000-ஆக உயர்த்தப்பட்டது மற்றும் 'தேசிய மீனவர் நல ஆணையம்' உருவாக்குவதற்கு அரசால் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் ஆகியவை மீனவர் நலனில் அரசு கொண்டுள்ள அக்கறையினை காட்டுகின்றன.

மீன்வளத்தின் பல்வேறு பிரிவுகளான மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு, உள்நாட்டு மற்றும் கடல்

மீன்வளம், உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடற்சார் உயிரின வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, மீன் சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் போன்ற அனைத்துத் துறைகளையும் சமமாக மேம்படுத்துவதற்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மீன்பிடிப்பினை ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்துதல் மூலம் மீன்வளங்களின் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. அரசின் தலைசிறந்த திட்டங்கள் மூலம், மீன்வளப்பிரிவின் இந்த தொலைநோக்கு இலக்குகள் நிச்சயமாக எய்தப்படும்.

**அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்**
**மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**
**கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.01.2022 அன்று மீனவ பிரதிநிதிகளை சந்தித்து அவர்களது பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்ததுடன், இலங்கையில் மீட்க இயலாத நிலையில் உள்ள படகுகள் மற்றும் வடகிழக்கு பருவ மழையின் போது சேதமடைந்த படகுகளுக்கு மொத்தம் ரூ.11.32 கோடி நிவாரணமாக அறிவித்தார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.12.2021 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் மீனவ பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 2020-21 ஆம் ஆண்டிற்கான அரசின் பங்கு ஈவுத் தொகையான ரூ.2.05 கோடியை மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் 03.01.2022 அன்று வழங்கினார்கள்.



மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் 26.03.2022 அன்று தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளம் கடற்பகுதியில் "கடல் கூண்டுகளில் சிங்கி இறால்" வளர்க்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் பெரிய ஏரியில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் (2020–21) கீழ் பாசன குளங்களில் "மிதவை கூண்டு மீன் வளர்ப்புத் திட்ட" பணிகளை 09.03.2022 அன்று தொடங்கி வைத்தார்கள்.



தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டம், மஞ்சளாறு அணை, அரசு மீன் பண்ணையில் ரூ.3.20 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள "மரபுவழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா (GIF Tilapia) பொரிப்பகம்"



மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் 01.04.2022 அன்று மீனவர் பிரச்சனைகள் தொடர்பான கோரிக்கை மனுவினை மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் அளித்தார்கள்




தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு அமைக்கப்பட்ட நவீன மீன் விற்பனை அங்காடி




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு மற்றும் திருச்சி மாவட்டம், ஜீயபுரத்தில் உள்ள மீன்வளப் பல்கலைக்கழகக் கட்டடங்களை 18.10.2021 அன்று திறந்து வைத்தார்கள்




மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், மீன்வளப் பல்கலைக்கழக தொழில்நுட்ப புத்தகத்தை 21.01.2022 அன்று முட்டுக்காடில் வெளியிட்டார்கள்




மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், முட்டுக்காடில் உள்ள நீர் மறுசுழற்சி முறை மீன்வளர்ப்புக் கட்டடத்தை 21.01.2022 அன்று திறந்து வைத்து, தொட்டிகளில் கொடுவா மீன் குஞ்சுகளை இருப்பு செய்தார்கள்

### தமிழ்நாடு மீன் உற்பத்தி
### 2017–18 முதல் 2021–22 வரை (இலட்சம் மெட்ரிக் டன்)




### தமிழ்நாடு கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி
### 2017–18 முதல் 2020–21



அரசு மைய அச்சகம், சென்னை—600 001.